# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் □ இதழ் 19 □ சிறுவர் தேசம் 06 □ யூலை 04 - செப் 04 □ ISSN 1474 - 8770



வன்முறை



இந்தியா நமக!



தமிழ் தேசியவாதம்

தொடரும் அரசியல்

## படுகொலைகள்





## உல்லாசமும் விளையாட்டும்

நியூஹாம் தமிழர் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்த சிறுவர், இளைஞர்களுக்கான உல்லாச நிகழ்வுகள் ஓகஸ்ட் 13 வரை, 3 வாரங்கள் இடம்பெற்றது. விளையாட்டுடன் ஏனைய கலை மற்றும் உல்லா சமான நிகழ்வுகள் ஈஸ்ஹாமில் இடம் பெற்றது. 16 வயதுக்கு உட்பட்ட ஆண்கள், பெண்கள் 90 பேர் வரை இந்நிகழ்வில் பங்கெடுத்தனர்.

## அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம் என புலிகள் கோர வேண்டும் - இலண்டன் அகதிகள் அமைப்பு

பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழ் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான சூழ்நிலை இல்லையென்பதை விடுதலைப்புலிகள் வெளியுலகுக்கு தெரியப்படுத்த வேண்டும் என Committe to Defend Srilankan Tamil Assylum Seekers அமைப்பின் தலைவர் தவத்துரை ஜெயரஞ்சன், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு ப தமிழ்செல்வனைக் கேட்டுக்கொண்டு உள்ளார். இச்சந்திப்பு கிளிநொச்சியில் ஓகஸ்ட் 10ல் விடுதலைப் புலிகளின் அரசியல் பணிமனையில் இடம்பெற்றது. 2002 யூன் இதழ் 8ல் தேசம் சஞ்சிகை இதே கோரிக்கையை முன்வைத்தது. தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்கள், இலங்கைச் சிறைக்கைதிகள், இந்திய சிறப்பு முகாம் கைதிகள் போன்றவர்கள் இன்று மறக்கப்பட்ட மக்களாகி விட்டனர்.

## புலி பசித்தாலும் புல் தின்னாது - கருணா பேட்டி

பாங்கொக்கை தளமாகக் கொண்டு இயங்கும் ஏசியன் ரிறிபியூன் எனும் இணையச் சஞ்சிகைக்கு ஓகஸ்ட் 8ல் பேட்டி அளித்துள்ள கிளர்ச்சித் தலைவர் கருணா தான் ஒரு புலி என்றும் புலி பசித்தாலும் புல் தின்னாது என்றும் தெரிவித்துள்ளார். இலங்கை இராணுவத்தடன் சேர்ந்து செயற்படுவது பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கருணா இதனைத் தெரிவித்தார். தான் தனது அணியை ஒழுங்குபடுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ள அவர் தனது சகாக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டு தன்னால் வெளிநாட்டுக்கு தப்பிச்செல்ல முடியாது என்றும் தான் ஒரு போராளி தனது உயிரில் தனக்கு ஆசையில்லை என்றும் குறிப்பிட்டு உள்ளார்.

ஏப்பிரல் 9 ல் வாகரையில் கொல்லப்பட்டவர்களை விட ஓகஸ்ட் வரையான நான்கு மாத காலத்தில் 50 தமிழர்கள் வரை படுகொலை செய்யப்பட்டு உள்ளனர். இவ்விதழ் பதிப்பிற்குச் செல்லும் போது ஓகஸ்ட் 16ல் பால நடராஜா ஐயர் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளார். முன்னாள் ஈரோஸ், புலிகள் இயக்க உறுப்பினரான இவர் தற்போது ஈபிடிபி உறுப்பினராவர். தினமுரசு ஆசிரியர் குழு உறுப்பினரும் ஆவார். வி.புலிகளுக்கு எதிரானவர்கள் மீது இடம்பெறும் தாக்குதல்களும் கருணாவின் பேட்டியும் கிழக்கில் இப்போதைக்கு அமைதி ஏற்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.

## காயத்திரி அம்மன் ஆலய தலைவர் நீதிமன்றில்

எட்ச்வெயர் காயத்திரி அம்மன் ஆலய நிர்வாக தலைவர் ரவிக்குமார் ஓகஸ்ட் 12ல் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்பட்டார். மே மாத முற்பகுதியில் ஆலயத்தில் வைத்து கந்தசாமி என்பவரைத் தாக்கியது தொடர்பான வழக்கிலேயே இவர் ஆஜர்படுத்தப்பட்டார். இவ்வழக்கின் சந்தேக நபர்கள் அவ்வாலயத்தின் ஐயர்கள், ரவிக் குமார் தங்களைத் தாக்கியதாக ஓகஸ்ட் 7ல் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து ரவிக்குமார் கைது செய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டார். இவருக்கு பிணை மறுக்கப்பட்டுள்ளது. வழக்கு விசாரணை சில மாதங்களில் ஆரம்பிக்கும்.

## குவைத்தில் தமிழர் கொலை இருவருக்கு பகிரங்கத் தூக்கு

குவைத்தின் நைபி பகுதியில் கவானிஸ் அம்ரோதாபி(28), ஏ.எச். முஹமட் அகமட்(28) ஆகிய இலங்கையர்கள் ஓகஸ்ட் 16ல் பகிரங்கமாக தூக்கிலிடப்பட்டுள்ளனர். கனடாவைச் சேர்ந்த மார்க்கண்டு கஜன் என்பவரை சுட்டுக் கொன்றதற்காகவே இவர்கள் தூக்கிலிடப்பட உள்ளனர். குற்றவாளிகள் கஜனிடம் ஆறு பெட்டி விஸ்கியை வாங்கிவிட்டு பணம் கொடுக்காமல் சுட்டுக் கொன்றுள்ளனர். இதற்கு உதவிய எம்.வை.அல்டீனுக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு உள்ளது.

**தண்டனை :** பிரசன்னா விபுலை வெம்பிளி பார்க் ஸ்ரேசனில் கொலை செய்த மைக்கல் ஜோன்-சார்ள்ஸ்க்கு 3வருட சிறைத் தண்டனை வழங்கப் பட்டுள்ளது. இத்தண்டனை போதாது என பிரசன்னாவின் விதவை திவ்வியாஞ்சலி தெரிவித்துள்ளார்.

## எலெக்சன் கேட்ட ஐயா நியாயம் கேட்கிறார்

'ஐயா எலெக்சன் கேட்கிறார்' நாடகத்தில் ஐயாவாகத் தோன்றிய அவைக் காற்றுக்கழகத்தின் முக்கிய கலைஞரான சாந்தகுணம் அவ்வமைப்பில் இருந்து வெளியேறப் போவதாக அறிவித்து உள்ளார். இவர் 1986ல் இலண்டனில் அ.கா.கழகம் வேர்விட்டகாலத்தில் முக்கிய கலைஞராக செயற்பட்டவர். சில காலமாக மேடையில் தோன்றவில்லை. அந்நியப்பட்டிருந்தார். 25 ஆண்டுகள் அ.கா.கழகத்தின் ஒரு தூணாக இருந்த கிருஷ்ணராஜா ஓரம்கட்டப்பட்டதில் அதிருப்தியுற்றிருந்த சாந்தகுணம் அண்மைய நாடக விழாவில் பிறைவேட் செக்யூரிட்டி போடப்பட்டது தொடர்பாகவும் கேள்வி எழுப்பி இருந்தார். அமைப்புக்குள் ஜனநாயகம் இல்லை என்பது சாந்தகுணத்தின் குற்றச்சாட்டு. உச்சி மீது வானிடிந்து விழ்ந்தாலும் மௌனம் ஒன்றையே தன் மொழியாகக் கொண்டுள்ளார் நெயியாளர் க பாலேந்திரா.

## இலண்டன் மேல்மருவத்தூர் அம்மன் வீடு சர்ச்சையில்

தமிழக மேல்மருவத்தூர் அம்மன் என்ற பங்காரு அடிகளுக்கு ஈஸ்ற்காமில் ஆலயம் அமைக்க சேர்க்கப்பட்ட பணம் முழுமையாக முதலிடப்படவில்லை என்றும் ஆலயம் தனிநபரின் பெயரில் வாங்கப்பட்டு உள்ளதாகவும் முறையிடப் பட்டு உள்ளது. கடந்த இரு ஆண்டுகளாக ஆலயத்தின் கணக்கு விபரங்கள் எதுவும் காட்டப்படவில்லை எனவும் தெரியவருகிறது. £340,000 பெறுமதியான இக்கட்டிடத்தை விற்க வேண்டியும் நிலை ஏற்படலாம் எனத் தெரியவருகிறது.

**தேசிய விருது** : பிதாமகன் படத்தின் கதாநாயகன் விக்ரமுக்கு சிறந்த நடிகருக்கான தேசியவிருது ஓகஸ்ட் 15 இந்திய சுதந்திர தின வழாவில் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளே :

தேசத்தின் பார்வை 01
வன்முறை : என்ன செய்ய ? 02
ஒப்பிரேசன் என்வர் 03
இந்தியா நமக ! பிரபா நமக!! 04
படுகொலைகள் 05
விடுதலை எப்போது 08
தமிழ்த் தேசியத்தின் ஊற்று 11
சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்கும் ஒரு அச்சுறுத்தல் 12
சர்வதேச மன்னிப்புச் சபைக்கு ஒரு மடல் 13
சுயநிர்ணய உரிமை 14
ஏன் சோனகர் 16
புலம்பெயர்ந்த நெடும் தீவு 16
பாபாவும் ஜக்ஷனும் சொக்கனும் 17
திரைப்படக் கூட்டுத்தாபனம் 19
சாமர்த்தியர்களின் சாமத்திய வீடு 20
எம் கே ஸ்ரீ அன்கோ மாட்டிக்கொண்டது 21
மறுமலர்ச்சிக் காலம் 22
அமைதி குலைந்த நாட்கள் 24
சொல்ல இயலாத கதை 25
கவிதை : பெண் 28
சிறுவர் தேசம் 29

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 791 944 4994
Siruvar Thesam : S Gauthaman
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box
35806,
London, UK,
E11 3JX.

# துப்பாக்கிகளும் செய்தியாளர்களும் செய்தியும்

இன்றைய செய்திகள் நாளைய வரலாறு. நாளைய வரலாற்றை இன்று பதிவு செய்கின்ற முதலாமவர் ஊடகவியலாளர்கள். ஒவ்வொரு சமூகத்தினதும் ஐம்புலன்களாகச் செயற்படும் ஊடகவியலாளர்கள் சமூகத்தின் காவலாளிகள்.

இந்த ஊடகவியலாளர்களது உரிமையை 1948ம் ஆண்டு உருவாக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் உறுதிப்படுத்தி உள்ளது. ஒவ்வொருவரும் கருத்துக்களைக் கொண்டிருக்கவும் வெளிப்படுத்தவும் சுதந்திரமுடையவர்கள். இச்சுதந்திரம் பயமின்றி கருத்துக்களை கொண்டிருப்பதையும் கருத்துக்களையும் தகவல்களையும் தேடுவதையும் பெறுவதையும் அவற்றை வெளிப்படுத்துவதையும் உள்ளடக்குகிறது. ஊடகவியலாளர்களுக்கான இந்த 19வது சரத்து "Aritcle 19" மிகவும் பிரபலமான ஒரு சரத்து.

ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலம் முதலே ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதுமான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டு இருந்தது. ஒடுக்கும் பேரினவாத அரச இயந்திரம் மட்டுமல்லாமல் ஒடுக்கு முறைக்கு எதிராகப் போரிட்ட அனைத்து தமிழ் போராளிக் குழுக்களும் ஊடகங்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். இதன் உச்சமாக பல வரலாற்றுப் பதிவாளர்கள் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இந்த நீண்ட பட்டியலில் இப்போது ஜி நடேசனின் பெயரும் சேர்க்கப்பட்டு விட்டது.

ஊடகங்களுக்கு எதிரான நேரடியான அல்லது மறைமுகமான வன்முறையின் விளைவாக ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பம் முதல் தமிழ் ஊடகங்கள் சுயதணிக்கைப் போக்கைக் கடைப்பிடிக்கின்றன. பேனா முனைகள் துப்பாக்கி முனைகளால் மழுங்கடிக்கப்பட்டது. இது தாயகத்தில் மட்டுமல்ல புலம் பெயர்ந்த மண்ணிலும் கொலை, கொலை மிரட்டல் எனத் தொடர்ந்தது.

புலி எதிர்ப்பு அணியினர் நடேசனை ஒரு ஊடகவியலாளனாக அல்லாமல் புலி உறுப்பினராகக் காட்ட முயன்றனர். புலிகள் நடேசனின் கொலையை வன்மையாகக் கண்டித்தனர். ஊடகங்களின் சுதந்திரம் பற்றி முழங்கினர். மறுபுறம் இலண்டன் ரிபிசியை தடைசெய்ய முழுமுயற்சி எடுத்தனர். டி சிவராமின் வீட்டை பொலிசார் சோதனையிடுவதை கண்டித்து புலி சார்பு ஊடகங்கள் போர்க்கொடி தூக்கினர். ஆனால் திருமலையில் தினமுரசு நிருபர் சுடப்பட்ட போது அவரை ஈபிடிபி உறுப்பினராகக் காட்ட முயற்சித்தனர்.

தமிழ் சமூகத்தில் ஊடகங்களின் சுதந்திரம் என்பது சார்புநிலைப்பட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. யாரால் யார் சுடப்பட்டார்கள் என்பதைப் பொறுத்தே கண்டனம் தெரிவிப்பதா அல்லது பேசாமல் விடுவதா என்று தீர்மானிக்கப்படுகிறது. இங்கு 'ஆட்டிக்கிள் 19' அடிபட்டுப் போய்விட்டது. இன்று தமிழ் ஊடகவியலாளர்களுக்காக பரபட்சம் இன்றி குரல் கொடுப்பது சிங்கள, மற்றும் சர்வதேச ஊடகங்களே. தமிழ் ஊடகங்களிடம் இன்னமும் ஊடகவியல் பண்பு வளரவில்லை என்பது வேதனையான உண்மை.

இன்று இலத்திரனியல் ஊடகங்கள் (இணையம்) குறைந்த செலவில் மிக வேகமாக செய்திகளைப் பரப்புகின்றன. கொட்டாவ படுகொலைச் சம்பவம் நியூயோர்க்கில் உள்ளவருக்குத் தெரியவந்த பலமணி நேரத்தின் பின்னரே பொலிசாருக்கும் இராணுவத்துக்கும் தெரியவந்தது. கருணாவுக்கு எதிராக புலிகளின் துப்பாக்கிக் குண்டுகள் பாய முன் தமிழ் ஊடகங்களுக்கு ஊடாக கருணாவுக்கு எதிரான யுத்தத்தை நடத்தி முடித்திருந்தனர் புலிகள். கருணாவும் இந்திய சர்வதேச ஊடகங்களுக்கு ஊடாகவும் புலி எதிர்ப்பு ஊடகங்களுக்கு ஊடாகவும் தாக்குதலை மேற்கொண்டார். செய்திகளின் பலம் இன்று துப்பாக்கிகளிலும் பெறுமதியானது என்ற காலத்தில் நாம் வாழ்கிறோம், அதனை பொறுப்புடன் கையாள்வது இன்றியமையாதது.



## வன்முறை : என்ன செய்ய?

த ஜெயபாலன்

தமிழ் இளைஞர்களின் வன்முறைச் செயல்கள் இலண்டன் தமிழ் சமூகத்தில் அமைதியின்மையையும் பதட்டத்தையும் ஏற்படுத்தி உள்ளது. இளைஞர் குழுக்களிடையே ஏற்பட்ட மோதலால் கடந்த நான்கு ஆண்டுகளில் 15 பேர் வரை அநியாயமாகக் கொல்லப்பட்டு உள்ளனர். ஒவ்வொரு வாரமும் இலண்டனில் ஏதோ ஒரு மூலையில் தமிழ் இளைஞர்கள் மோதிக்கொள்கின்றனர். இரத்தம் சிந்தப்படுகிறது. சில நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பிரித்தானிய சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டு உள்ளனர். இன்னும் சில நூறு இளைஞர்கள் அதற்கான வழிவகைகளை இன்னமும் செய்து கொண்டுள்ளனர்.

புலம்பெயர்ந்து வாழும் 100,000 தமிழ் மக்களில் மிகச் சிறு வீதத்தினரான இவர்களை வழிக்குக் கொண்டுவர பல நூறாயிரம் பவுண் செலவில் பொலிஸ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. ஒரு கொலையை விசாரணை செய்து தண்டனை வழங்குவதற்கு மட்டும் ஒரு மில்லியன் பவுண் வரை செலவிடப்படுகிறது. யூலை 8ல் இடம்பெற்ற ஒரு நாள் பொலிஸ் நடவடிக்கைக்கு £70,000 க்கு மேல் செலவேற்பட்டுள்ளது.

இளைஞர்களின் வன்முறை தொடர்பாக 3 தமிழ் கவுன்சிலர்கள் தெரிவித்த கருத்துக்கள் கீழே.

### கவுன்சிலர் மைக்கல் செல்வநாயகம் :



சில இளைஞர்கள் தான் இந்த கெட்ட செயல்களில் ஈடுபடுகிறார்கள். சமுதாயத்துக்கு நிம்மதி கிடைக்க வேண்டும். இது தான் முக்கியமானது. அதற்கு பொலிசாருடன் ஒத்துழைக்க வேண்டியது எமது கடமை. இந்த இளைஞர்கள் தொடர்ந்தும் இந்த கெட்ட செயல்களில் ஈடுபடாமல் திருந்தி வாழ வேண்டும். அதற்காகவே இந்த பொலிஸ் நடவடிக்கைகள். சிலர் இந்த இளைஞர்களைப் பயன்படுத்துகிறார்கள். சமூகப் பிரதிநிதிகள் வன்முறையில் ஈடுபடும் இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டும். இவர்களுக்குத் தண்டனை வாங்கிகக கொடுப்பது எமது நோக்கமல்ல.

### கவுன்சிலர் தயா இடைக்காடர் :



தமிழ் மக்கள் பொலிஸ் நடவடிக்கைக்கு அதரவு அளிப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது. ஒரு சிறு பிரிவினர் முழுச் சமூகத்தின் பெயரையும் கெடுக்கின்றனர். பொலிசுடன் ஒத்துழைப்பது மக்களின் கடமை. மேலும் ஜனநாயகத்தின் அடிப்படை ஊடகங்களின் சுதந்திரம். எதிர்மாறான கருத்துக்கள் இருப்பது இயற்கையானது. ஆனால் அதற்காக ஊடகங்களை ஒடுக்க நினைப்பது பெரும் தவறு. இவற்றுக்கு எல்லாம் பொலிசாருடன் ஒத்துழைத்தே தீர்வு காணப்பட வேண்டும்.

### கவுன்சிலர் போல் சத்தியநேசன் :



தமிழ்சமூகம் பொலிசாருடன் பங்காளிகளாக செயறபடுகிறது. ஆனால் பொலிசாருக்கு நாங்கள் blank cheque கொடுக்க முடியாது. Gang cultureல் ஈடுபட்டவர்களை கட்டுப்படுத்த நாங்கள் ஒத்துழைப்போம். அதே சமயம் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நடவடிக் கைகளில் பொலிசார் ஈடுபட வேண்டும்.

இன்று தமிழ் சமூகத்தின் நலன்களுக்கு மில்லியன் பவுண்கள் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படுகிறது. அது சரியான காரியங்களுக்குப் பயன்படுத்தப்படவில்லை. தவறு செய்தவர்கள் தண்டனையை அனுபவிக்க வேண்டும். ஆனால் தண்டனைக்குப் பின் அவர்கள் திருந்தி வாழ வழியையும் காட்ட வேண்டும். இது தமிழ் சமூத்தினது பொறுப்பு. இந்த சமூக அமைப்புகள் இந்த இளைஞர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க முயற்சி எடுக்க வேண்டும். அவர்களது தேவைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். மறு வாழ்வழிப்பது இளைஞர்களுக்கு நம்பிக்கையையூட்டும்.❑

### தமிழ் பொது அமைப்புகளின் ஆண்டு வருமானம்

| | |
|---|---|
| Medical Institute of Tamils : £ | 51,119.00 |
| London Tamil Centre : £ | 131,913.00 |
| South London Tamil Welfare Group : £ | 172,448.00 |
| Tamil Association of Brent : £ | 48,924.00 |
| Tamil Community Housing Association : £ | 1,192,000.00 |
| Tamil Information Centre : £ | ............... |
| The Tamil Orphans Trust : £ | 77,257.00 |
| Tamil Refugee Action Group : £ | 67,076.00 |
| Tamil Relief Centre : £ | 504,220 |
| Tamil Refugee - Training & Educcation Centre : £ | 563,115.00 |
| Tamil Welfare Association Newham : £ | 64,145.00 |
| The Standing Commette of Tamil Speaking People £ | 25,578.00 |




## ஒப்பிரேசன் என்வர் 3 ஆரம்பம்

ஒப்பிரேசன் என்வர் 3 யூலை 12 முதல் ஆரம்பமாகி உள்ளது. அடுத்த ஆறு மாதங்களுக்கு இந்நடவடிக்கை இடம்பெற உள்ளது. கிறடிட்காட் மோசடிகளில் ஈடுபட்டுள்ள வர்த்தக நிறுவனங்கள் குறிப்பாக எரிபொருள் நிலையங்கள், குற்றங்களில் பயன்படுத்தும் வாகனங்கள், குற்றச்செயல்களில் ஈடுபடுவோர்களது தங்குமிடங்கள் ஆகியன குறிவைக்கப்பட்டு உள்ளன. ஏற்கனவே 15க்கும் மேற்பட்ட எரிபொருள் நிலையங்கள் சோதனை இடப்பட்டு கைதுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.



இளைஞர்களின் கிறடிட்காட் மோசடிகளில் வியாபார நிறுவனங்களும் உரிமையாளர்களும் தொடர்புபட்டு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வோல்தம் பொறஸ்ற்றில் சம்பந்தப்பட்ட சில வியாபார நிறுவனங்கள் மீது ஏற்கனவே பொலிஸ் முற்றுகை இடம்பெற்றது. மட்டை போட்ட பிரபல நகைக் கடை உரிமையாளர் தற்போது பொலிஸ் கண்காணிப்பு பட்டிகட்டி விடப்பட்டு உள்ளார்.



தமிழ் இளைஞர்களின் வன்முறைக்கும் கிறடிட்காட் மோசடிக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதால் பொலிசார் இரண்டையும் இணைத்தே நடவடிக்கை எடுக்கின்றனர். மேலும் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்கள் மில்ற்றன்கீன்ஸ், பேர்மிங்காம், லிவர்பூல், அபடீன் என நாட்டின் ஏனைய பாகங்களுக்கும் பரவிச் சென்றுள்ளதால் நாட்டின் சகல பிரிவுப் பொலிசாருக்கும் இது தொடர்பாக விளக்கமளிக்கும் மாநாடு ஒன்று ஸ்கொட்லன்ட் யாட்டில் விரைவில் ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது.❑

## ஒப்பிரேசன் என்வர் புறுஜஸ்




அருகில் யூலை 8 பொலிஸ் நடவடிக்கைப் படங்கள். பொறஸ்ட்கேட் பொலிஸ் அதிகாரி றோஜர் மொலி தலைமையில் பார்னற், ஹரோ, குறொய்டன், றெட்பிறிஜ், வோல்தம்பொறஸ்ட், நியூஹாம் ஆகிய உள்ளாட்சிப் பிரிவுகளில் ஒப்பிரேசன் என்வர் புறுஜஸ் மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையின் போது **Tamil Hotline - 0800 587 2935** அறிமுகப்படுத்தப்பட்டது. Automatic Number Plate Recognition மூலம் குற்றச்செயல்களில் ஈடுபட்ட அல்லது சந்தேக நபர்கள் பயன்படுத்தும் வாகனங்கள் சோதனையிடப்பட்டு கைதுகள் மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையின் போது 29 பேர் கைது செய்யப்பட்டனர். கள்ள கிறடிட்காட்கள் அல்லது பிரதி செய்யப்பட்ட கிறடிட்காட்கள் 50, பிரதி செய்யும் உபகரணங்கள், ஆயுதங்கள், போதைப் பொருட்கள், கள்ளகாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட விலையுயர்ந்த பொருட்கள் எனபன மாட்டின. முப்பதினாயிரம் பவுண் பெறுமதியான மெசடிஸ் பென்ஸ் காரும் £27,000 உம் கைப்பற்றப்பட்டது.❑



## பா.உ. சுரேஸ் பிரேமச்சந்திரனின் கீதோபதேசம் :

# இந்தியா நமக! பிரபா நமக!! ரணிலும் நமக!!!

த ஜெயபாலன்

இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் நலன்கள் இலங்கை உடன் பின்னிப் பிணைந்து உள்ளதால் இந்தியாவை அனுசரித்து நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என இலங்கை தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA) பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழர் தகவல் நடுவத்தின் ஏற்பாட்டில் யூலை 31ல் நடைபெற்ற சந்திப்பில் தெரிவித்தார். இலங்கை, இந்தியாவில் உள்ள சிறிய கேரள மாநிலம் போன்றது. இந்தியாவை மீறி நாம் எதுவும் செய்யவியலாது எனக் குறிப்பிட்ட அவர் இந்தியாவை எம்பக்கம் திருப்ப வேண்டும் என்றார்.

TNA பா உ ஈழவேந்தனை சென்னையில் வைத்துத் திருப்பி அனுப்பியுள்ளது இந்திய அரசு. அப்படி இருந்தும் இந்தியாவை தமிழ் மக்கள் பக்கம் இழுக்க TNA ஆல் முடியுமா என தேசம் சார்பில் கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த பிரேமச்சந்திரன் ஈழவேந்தன் திருப்பி அனுப்பப்பட்டதற்கு அவரது பொறுப்பற்ற செயலே காரணம் என்றும் தங்கள் குழு ஒன்று விரைவில் இந்தியா செல்ல இருப்பதாகவும் குறிப்பிட்டார். இலங்கை அரசுடன் உறவை வைத்திருப்பதே இந்தியாவின் புவியியல் அரசியல் நலன்களுக்கு நன்மையாக அமையும். அப்படி இருக்கையில் எப்படி இந்தியாவை தமிழ் மக்கள் பக்கம் திருப்புவீர்கள் என ஜெயக்குமார் கேட்டதற்கு தாங்கள் உறவை ஏற்படுத்துவதற்கான தளத்தை ஏற்படுத்துவதாக பிரேமச்சந்திரன் மேலோட்டமாகத் தெரிவித்தார்.

பொட்டம்மான், பிரபாகரன் ஆகியோருக்கு பிடியாணை பிறப்பித்துள்ள நிலையில் இந்தியாவுடனான பிரச்சினைக்கு புலிகள் தானே தீர்வுகாண வேண்டும் என சிவபாதசுந்தரம் கேட்டார். அதற்கு புலிகளும் இந்தியாவின் அவசியத்தை உணர்ந்து இருப்பதாக பிரேமச்சந்திரன் பதிலளித்தார். புதிய அரசு நட்புறவை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டார். இந்தியாவின் நட்புறவை பாதிக்குமானால் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு உள்ள கைதிகளின் விடுதலை பற்றி கேட்கமாட்டிர்களா என தேசம் சார்பில் கேட்கப்பட்ட போது, எதற்கு முக்கியத் துவம் கொடுக்கப்பட வேண்டும் என்று உள்ளது. இந்தியா உடன் நட்புறவை ஏற்படுத்துவதே முதன்மையானது என பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகளின் இராணுவ பலமே பேச்சுவார்த் தைக்கு அரசைத் தள்ளியது என்று குறிப்பிட்ட பிரேமச்சந் திரன் மற்றுமொரு கேள்விக்கு பதிலளிக்கையில் சர்வதேச அழுத்தமே புலிகளை ஒரு சமாதான தீர்வுத்திட்டத்துக்கு நிர்ப்பந்தித்ததாகக் கூறினார்.

தமிழரசுக் கட்சி புலிகளின் ஊதுகுழலாக இருப்பதாக ஆய்வாளர் வி சிவலிங்கம் சுட்டிக்காட்டினார். TNA புலிகளின் பிரதிநிதிகள் அல்ல மக்களின் பிரதிநிதிகள் என்பதை நிருபிக்க வேண்டும் என சிவநாயகம் தெரிவித்தார். புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று TNAயினர் அறிவித்த பின் இது சாத்தியமா என்று சையட் பசிர் கேள்வி எழுப்பினார். தாம் அதனை உணர்ந்து இருப்பதாகக் குறிப்பிட்ட பிரேமச்சந்திரன் விடுதலைப் போராட்டம் தொடர்பான பேச்சுவார்த்தை வெற்றி பெற வேண்டுமானால் ஒரே குரலில் செயற்பட வேண்டும் என ஆரம்பத்திலேயே குறிப்பிட்டார்.

தமிழர்களே தமிழர்களை அர்த்தமற்ற வகையில் கொல்கிறார்கள். இது என்ன செய்தியைக் கொண்டு செல்லப் போகிறது என பார்வையாளர்களில் ஒருவர் கேட்டார். சக பா உ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியை தமிழரசுக் கட்சி கண்டிக்கவில்லையே ஏன் என சையட் பசீர் கேள்வி எழுப்பினார். இவற்றுக்கு பதிலளித்த பிரேமச்சந்திரன் தாங்கள் எந்தக் கொலையையும் கொலை முயற்சியையும் ஆதரிக்கவில்லை என்றும் தங்களது நிலைப்பாட்டை புலிகளுக்கு தெரியப்படுத்தி வருவதாகவும் அதனை ஏற்றுக் கொள்வதும் ஏற்றுக் கொள்ளாததும் புலிகளைப் பொறுத்தது என்றும் பதிலளித்தார். சிலவற்றை அவர்கள் கேட்டு நடப்பதாகவும் பல விடயங்கள் திருத்தப்பட்டு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதே கருத்துக்கு தொடர்ந்து விளக்கமளிக்கையில் இலண்டனில் உள்ள five star democracy யை, இலங்கை சூழ்நிலையில் எதிர்பார்க்க முடியாது என்றும் நாங்கள் கொலைகளை ஆதரிக்கவில்லை ஆனால் தவிர்க்க முடியாது. வன்முறையற்ற பாதை கடினமானது என்று பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

எங்களை இல்லாமல் செய்யவே புலிகள் இருந்தார்கள். மிகக் காரசாரமாக புலிகளைக் கண்டித்தவன் நான். அவர் களுடைய ஹிட் லிஸ்டிலும் எனது பெயர் இருந்தது. ஆனால் நாங்கள் தனித்தனியாக இருந்து என்ன செய்ய முடியும்? என்று வினவினார் பிரேமச்சந்திரன்..

இலங்கையில் தமிழின அழிப்பை ஐக்கிய தேசியக் கட்சி முன்னின்று நடத்திய போதும் அன்றைய கூட்டணி யும் இன்றைய TNAயும் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது மென்போக்கைக் கொண்டிருக்கின்றனர். அதனை பிரேமச்சந்திரனும் வெளிப்படுத்தினார்.

TNA பா.உ க்கள் வாக்கு வேட்டைக்கும் பாதுகாப்புக் கும் புலிகளை துதிக்கும் அதே நேரம் தமது சொத்துக் களை பாதுகாக்க இந்தியாவையும் கொழும்பில் தங்கள் நலன்களைப் பேண ஐக்கிய தேசியக் கட்சியையும் துதிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. ❑

# தொடரும் அரசியல் படுகொலைகள்

தொகுப்பு :
எஸ் பாலச்சந்திரன்

தினமும் படுகொலைகள் நிகழ்கின்றன. தொடரும் இப்படுகொலைகள் தமிழ் மக்கள் மனதில் மிகவும் வேதனையைக் கொடுக்கின்றது. இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் இடையில் நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகிவிட்டது. ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் ஏதோ சமாதானமே வந்துவிட்டதாக பத்திரிகைகள் உட்பட எல்லோரும் எதிர்வு கூறினார்கள். ஆனால் மத்தியஸ்தம் செய்ய வந்த நோர்வே குறித்தும், ஒதுங்கி இருக்கும் இந்தியா குறித்தும் சிங்கள ஆளும்வர்க்கம் குறித்தும் சந்தேகம் தெரிவித்த ஒரு சிலர் ஓரம்கட்டப்பட்டனர். அப்பாவி மக்களும் இதனை நம்பினர். ஆனால் இன்று நடப்பதென்ன? சமாதானம் வந்துவிட்டது என்று எதிர்வு கூறியவர்கள் எல்லோரும் தற்போது சண்டை வரப்போகிறது என்று சொல்ல ஆரம்பித்துவிட்டனர். பாவம் மக்கள் இதனையும் கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய நிலை.

இந்த ஒப்பந்த காலத்தில் எத்தனையோ மனிதப் படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. தொடர்ந்தும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் புலிகள் இயக்கத்தில் இருந்து கருணா அணியினர் பிரிந்து சென்ற பின் இக்கொலைகள் அதிகரித்து உள்ளன. அரசியல்வாதிகள் மட்டுமின்றி பேராசிரியர்கள், ஊடகவியலாளர்கள், அரசாங்க அதிபர் உட்பட அப்பாவி மக்களும் சுடப்படுகின்றனர். இக்கொலைகள் குறித்து மாறி, மாறி குற்றம்சாட்டப்படு கிறது. ஆனால் இதனை நிறுத்த யாரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட தமிழ் மக்கள் தங்களால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகி விடுமோ என ஏங்கும் அளவிலே நிலை உள்ளது. இவ்வாறான பரிதாபகரமான நிலைமை வேறு எந்த இனத்திற்கும் ஏற்பட்டிருக்குமா என்பது சந்தேகமே.! எனவே இவ்வாறான வெட்ககரமான அவலநிலைமை மாற தமிழ்த் தலைமைகள் சிந்திந்து செயற்பட முன்வர வேண்டும். இல்லையேல் தமது இத்தகைய வரலாற்றுத் துரோகத்துக்கு ஓர் நாள் மக்கள் மத்தியில் பதில் சொல்ல வேண்டி ஏற்படும்.

தொடரும் இப்படுகொலைகள் குறித்து புலம்பெயர்ந்து வாழும் சிலரிடம் கேட்ட போது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

**ராஜேஸ்குமார் (ராகவன்) :**

கருத்துச் சுதந்திரம் ஒரு மனிதனின் அடிப்படை உரிமை. கருத்துச் சுதந்திரத்தை மறுக்கின்ற ஒரு அமைப்பு உண்மையான விடுதலை அமைப்பாக இருக்க முடியாது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாறு அரசியல் படுகொலைகளின் வரலாறாகவே இருக்கின்றது. தனிநபரின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள திரணி அற்று அவர்களை அழிக்கும் செயல் விடுதலையின் ஆத்மாவையே அழித்துவிடும். தமிழ் விடுதலைப் போராட்ட வரலாறு துரோகி அழிப்பு என்ற பெயரில் மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை படுகொலை செய்யும் பாரம் பரியத்தைக் கொண்டிருக்கிறது. மாற்று அமைப்புகளை கொலை செய்து துரோகப்பட்டம் சூட்டியநிலை இன்று புதியதோர் பரிமாணம் எடுத்து இருக்கின்றது. புலிகளில் இருந்து பிரிந்து போன கருணா பிரிவினருக்கும் புலிகளுக்கும் இடையே தொடரும் படுகொலைகள் எமது போராட்டத்தின் அடிப்படையையே கேள்விக்குறியாக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

**ரவிச்சந்திரன் (ரவி) :**



நான் ஒரு கொம்பியூட்டர் எஞ்சினியர். இங்கு இருக்கும் நிறவெறி காரணமாக நான் கறுப்பு இனத்தைச் சேர்ந்தவன் என்பதால் நான் படித்த படிப்பிற் குரிய வேலை எடுக்க முடிய வில்லை. இதனால் வேறுவழி இன்றி ரக்சி ஓட்டிப் பிழைக்கி றேன். நான் எனது தாய்நாட்டுக்குச் சென்று கௌரவமாக வாழ விரும்புகிறேன். ஆனால் அங்கு நிகழும் படுகொலை கள் காரணமாக செல்ல முடியாமல் உள்ளது. என்னைப் பொறுத்தவரை தலைமைகள் பலவும் அந்நிய சக்திகளின் ஏஜெண்டுகளாக இருப்பதே இப்படுகொலைக்குக் காரணமாக இருக்கின்றன. எனவே இந்திய, அமெரிக்க சக்திகளின் ஊடுருவல்கள் முழுமையாகத் தடுக்கப்படும் போதே இக்கொலைகள் நிறுத்தப்பட முடியும் என கருதுகிறேன்.

## டொக்டர் நீதிராஜன் :

நான் ஒரு டொக்டர். என்னைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு உயிரையும் என்னால் இயன்றளவு காப்பாற்றவே முயற்சி செய்வேன். ஆனால் அரசியல் தலைவர்கள் தங்களின் சுயநலத்திற்காக பொறுப்பற்ற விதத்தில் படுகொலைகள் செய்வதைக் காணும்போது சம்பந்தப்பட்ட தலைமைகளுக்கு ஏதாவது மனநோய் இருக்குமோ என்றே எண்ணத் தூண்டுகிறது. அவர்களுக்கு உடனடியாக மன நோய் சிகிச்சை அளிக்கப்படுமாயின் பல கொலைகளைத் தடுத்து நிறுத்தலாம் என்பது எனது கருத்தாகும். மீண்டும் எமது தமிழ் மண்ணுக்குச் சென்று எமது மக்களுக்கு சேவை செய்ய ஒரு நல்ல சூழ்நிலை அங்கு உருவாக வேண்டும் என்று விரும்புகிறேன்.

## சங்கர் (சாந்தன்) :

அன்று புலிகள் இயக்கம் மற்ற இயக்கப் போராளிகளை துரோகிகள் என முத்திரைகுத்திக் கொன்றார்கள். இன்று தங்களுடன் இருந்து பிரிந்து சென்ற கருணா அணியினரை துரோகிகள் எனக் குறிப்பிட்டு கொல்கின்றனர். இவ்வாறு தமிழ் போராளிகள் தங்களுக்குள் கொல்லப்படுவதை இலங்கை அரசு ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்து ரசித்துக் கொண்டிருக்கிறது. இதுவரை நடந்த கொலைகள் பற்றி சரி, பிழை விவாதித்துக் கொண்டிருப்பதில் எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை. மாறாக இனியாவது இக்கொலைகள் நிகழாமல் இருக்க அனைவரும் முயற்சி மேற்கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் நலனில் உண்மையான அக்கறை இருக்குமாயின் இதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## தீபசுதன் (வானொலி அறிவிப்பாளர்) :



இலங்கையில் வடகிழக்கு தமிழ் மக்கள் தங்கள் உரிமைக்காக ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்த காலத்தில் இருந்து இம் மனித படுகொலைகளும் ஆரம்பித்து விட்டன. இது இன்னும் தொடர்கிறது. ஆரம்பத்தில் இருந்தே இது தவறு எனக் கண்டிக்கப்படவில்லை. மாறாக நியாயப்படுத்தப்பட்டது. பின்னாளில் இக்கொலைகளைக் கண்டிக்க முன்வந்தவர்களில், இவ்வாறான கொலைகளில் அவர்களும் சம்பந்தப்பட்டிருந்ததால் அவர்களின் நியாயம் மக்கள் மத்தியில் எடுபடவில்லை. இக்கொலைகள் குறித்து இலங்கை அரசிடமோ அல்லது மனித உரிமை அமைப்புகளிடமோ முறையிடுவதிலோ அல்லது நியாயம் கேட்பதிலோ எவ்வித பயனும் இல்லை. மாறாக எமது போராட்டம் மனித நேயம் மிக்கதாகவும் ஒரு மானிட விடியலுக்கான நகர்வை நோக்கியதாகவும் அமைத்துக் கொள்வதிலேயே தங்கி உள்ளது.

## அனுசிறிகுமார் (ராஜன்) :



அண்மையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நடேசன் எனது நண்பர். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர். அண்மையில் நான் இலங்கை சென்றபோது கூட மட்டக்களப்பு சென்று அவருடன் கதைத்தேன். அவருடைய படுகொலைக்கு கருணாவே பொறுப்பு. உயிர் இழப்புகளைத் தவிர்ப்பதற்காக மோதல் செய்யாமல் பின்வாங்குகிறேன் என்று கருணா முன்பு கூறினார். ஆனால் இப்போது அவர் உயிர்களை அழிப்பதைப் பார்க்கும் போது அன்று அவர் அவ்வாறு கூறியது படுபொய் என்பது இப்போது புலனாகிறது. இதே போல் சில மாதங்களுக்கு முன்னர் சிறு குழந்தை ஒன்று தந்தையுடன் சேர்த்துக் கொல்லப்பட்டது. இவ்வாறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அப்பாவிகள் கொல்லப்படுவது, அதை யார் செய்தாலும் என்னைப் பொறுத்தவரை தவறுதான். அதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

## சேனன் (எழுத்தாளர்):

கொலை இன்று ஒரு இயல்பான நடவடிக்கையாகிப் போய்விட்டது. நவீனரக ஆயுதங்களால் கொலை செய்வதும், ஆளை தட்டினா சரி, பிரச்சினையை அடக்கி வழிக்குக் கொண்டு வரலாம் என்று மனிதகுல எதிர்ப்பு சக்திகள் நம்புகின்றன. கொலைகளின் மூலம், வன்முறையின் மூலம் எந்த ஒரு போராட்டத்தையும் வெல்ல முடியாது. முக்கியமாக இலங்கையில் ஆயுதக் கலாச்சாரத்தை தலையில் தூக்கிக் கொண்டாடும் சூழலில் கொலைகளுக்கு எதிராகக் கதைப்பதே பகிடியாகக் கதைக்கப்படக் கூடும். அவன் சுட்டா திருப்பிச்சுடுவேன் என நியுட்டோனியம் பேசக் கூடும். மனித உயிரைவிட ஆயுதங்கள் மதிப்புக் கூடி நிற்கும் ஒரு சூழலில் இன்றும் இன்னும் அநாகரீக செயற்பாடுகள் அதிகரிப்பதை தொடர்ந்தும் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எமது எதிர்ப்புக் குரலைத் தெரிவித்தேயாக வேண்டும். புலிகள் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளத் தயாரற்றவர்கள். பதில் துப்பாக்கியால் தருவார்கள் என்று தெரிந்தும் நாம் எமது கண்டனக் குரலை உரத்துக் கொடுக்க வேண்டியுள்ளது. மீண்டும் மீண்டும் கத்துவோம். எத்தனை குரல்களை அவர்கள் தோட்டாவால் அடைக்கிறார்கள் என்று பார்த்துவிடுவோம்.

## பார்த்தீபன் :

தம்பி இங்க கொஞ்சப்பேர் ஜனநாயகம் ஒன்றியம் கட்டி கொலைகளைக் கண்டிப்பதாக கூறி எமது தேசியத்துக்கு எதிராக சேறு பூசுகினம். ஆனால் இவையும் இவையின்ர ஆக்களும் செய்த கொலைகள் எத்தனை தெரியுமோ? அதைப்பற்றி முதல்ல இவை கதைக்கட்டும்.

அப்புறம் புலிகளின்ர கொலையைப் பற்றி பிறகு கதைக்கலாம்.



**தோழர் பாலன் :**

கருத்துக்களை கருத்துக்கள் மூலம் எதிர்கொள்ளத் திரணியற்றவர்கள் கருவிகள் மூலம் எதிர்கொள்கின்றனர். ஏகபிரதிநிதிகள் என்ற யதார்த்த பூர்வமற்ற கருத்துக்களின் பின்னணியில் மாற்றுக்கருத்துக் கொண்டவர்கள் கொல்லப்படுகின்றனர். இத்தகைய ஜனநாயக மறுப்பு பாசிசத் தன்மையின் வெளிப்பாடாகும். வரலாற்றில் பாசிசத்துக்கு ஏற்பட்ட தோல்வி இலங்கையிலும் மீண்டும் நிருபிக்கப்படும். மக்கள் நிச்சயம் பாடம் புகட்டுவார்கள்.

**மங்கையற்கரசி அமிர்தலிங்கம்**



எனது கணவரை புலிகள் கொன்றார்கள். ஏன் கொன்றார்கள் என்று இதுவரை சொல்லவில்லை. அவர் செய்த துரோகம் என்ன? தம்பி பிரபாகரனை கேட்கிறேன். வீட்டுக்கு வந்து எத்தனை தடவை எனது கையால் சாப்பாடு வாங்கி சாப்பிட்டிருக்கிறார். எப்படிக் கொலை செய்ய மனம் வந்தது. பிரபாகரன் தனக்கு இந்தியத் தலைவர்களை அறிமுகம் செய்து வைக்கும்படி கேட்டார். உடனே என் கணவரும் செய்து கொடுத்தார். அதற்குரிய பரிசா இந்தக் கொலை? கொலை செய்வதற்கு முன் ஒரு வார்த்தை சொல்லி அனுப்பி இருந்தால் நாம் பேசாமல் ஒதுங்கி இருப்போம்.

(ஏப்ரல் 10ல் புஸ்பராஜாவின் ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் நூல் வெளியீட்டுவிழாவில் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பேசிய பேச்சில் இருந்து.)❑




பிரித்தனியாவில் எவ்விடத்துக்கும் உல்லாசமாக சென்று வர

VISHWAH

TOURS & TRAVELS

Wales, Alton Towers, Scotland, ............ பிரித்தானியாவில் எங்கும் செல்ல

லூர்ட்ஸ் தேவாலயம் மற்றும் ஐரோப்பிய நாட்டு உல்லாசப் பயணங்களுக்கும்


விமான நிலையத்தக்கு ஏற்றிச் செல்ல அங்கிருந்து அழைத்து வர

குறைந்த செலவில், சாரதியுடன், 14 இருக்கைகளுக்கு உட்பட்ட சொகுசு வாகனம் ஒழுங்கு செய்து தரப்படும். முகவர்கள் இல்லாததால் குறைந்த கட்டணத்தையே நாம் அறவிடுகிறோம்.

தொடர்புகளுக்கு : குமார்

020 8869 0360

077 5171 7097




கியூபாவில், சீனாவில், வடகொரியாவில் எல்லாம் மனித உரிமை மீறல்கள் நிகழுகின்றன என்று அமெரிக்காகவுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கூட இலங்கை இந்தியச் சிறைகளில் தமிழ் கைதிகளுக்கு இழைக்கப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து வாய் திறக்காது மௌனம் சாதிக்கின்றன. ஒருவேளை தமிழனை அவர்கள் மனிதனாகக் கருதவில்லையா? அல்லது தமிழனுக்கு மனித உரிமை இல்லை என்று கருதுகிறார்களா?

எஸ் பாலச்சந்திரன்
செயலாளர் MRRHR

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேலாகி விட்டது. இன்னமும் தமிழ் அரசியற் கைதிகள் முழுமையாக விடுதலை செய்யப்படவில்லை. அடைத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகள் தங்களது விடுதலை கோரி உண்ணாவிரதம் இருப்பதும், அரசியல்வாதிகள் போய் வாக்குறுதி கொடுப்பதும் தொடர்வதாக இருக்கின்றதேயொழிய அக்கைதிகள் விடுதலை மட்டும் நடப்பதாகத் தெரியவில்லை. ஏதேதோ பிரச்சினை பற்றி எல்லாம் பேசும் எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கைதிகள் விடுதலை குறித்து மட்டும் ஏனோ வாயைத் திறக்க மறுக்கின்றனர். இதிலிருந்து இவர்கள் எம்மக்கள் நலனில் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கின்றனர் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

இலங்கைச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகளின் விடுதலை குறித்து எழுதும் ஒரு சில பத்திரிகைகள் கூட இந்தியச் சிறைகளில், சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழர்களின் விடுதலை குறித்து எழுதத் தயங்குகின்றன. ஒரு வேளை எழுதினால் இந்தியத் தூதுவரின் மிரட்டலுக்கு ஆளாக நேரிடுமோ என அஞ்சுகின்றனரோ அல்லது இந்தியா மூலம் அனுபவிக்கும் வசதிகள் அற்றுப்போய் விடுமோ என அஞ்சுகின்றனர் போலும்.

அமெரிக்க குவாண்டானமோ மற்றும் ஈராக் Abu Ghraib சிறைக் கொடுமைகள் குறித்து பக்கம் பக்கமாக எழுதித் தள்ளும் எமது அரசியல் (?) ஆய்வாளர்கள் இலங்கை, இந்தியச் சிறைகளில் தமிழ் கைதிகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறித்து ஒரு வரியேனும் எழுத மறுப்பது ஏன்? வெளிநாடுகளில் இருந்து வரும் பணத்திற்காக NGO நடத்தும் எமது மனித உரிமை அமைப்புகளும் கிடைக்கும் பணத்தை சுருட்டுவதில் குறியாக இருக்கின்றதேயொழிய இச்சிறைகளில் நிகழும் அடிப்படை மனித உரிமை மீறல்களை வெளி உலகத்துக்கு அம்பலப்படுத்தத் தயங்குவது ஏன்?

இலங்கை, இந்தியச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இவர்களின் விடுதலையை தேசம் சஞ்சிகை தொடர்ந்தும் வலியுறுத்தும். கடைசிக் கைதி விடுதலை செய்யப்படும் வரை தேசம் தொடர்ந்தும் குரல் கொடுத்தக் கொண்டே இருக்கும். சென்ற இதழ்களில் சிறப்புமுகாமில் அடைத்து வைக்கப்பட்டிருந்த கைதிகளின் வேதனை மிகுந்த அனுபவங்களை தேசம் வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டிருந்தோம். இவ்விதழில் இன்னும் இருவரின் அனுபவங்கள்.

## நா சந்திரசேகரன் குடும்பத்தினர்

நா சந்திரசேகரன் (42), ச மேரி வக்சலா (33), ச ராஜினி (8), ச விநோத் (6)

நா சந்திரசேகரன் (சந்திரன்) இவரும் மற்றும் மனைவி, உறவினர்கள், நண்பர்கள் மொத்தம் 17 பேர் 1996 மாசி மாதம் அகதியாக இந்தியா சென்றனர்.மண்டபம் முகாமில் பதிவு செய்து தங்கி இருந்த வேளை 16-02-1996 அன்று கியூபிராஞ் பொலிஸ் இவர்களைக் கைது, செய்து மதுரையில் மேலூர் சிறப்பு முகாமில் அடைத்தது. ஒருவர் தங்குவதற்கே வசதியற்ற ஓர் அறையில் 17 பேரும் அடைக்கப்பட்டனர். இச்சிறிய அறையில் தான் 17 பேரும் உண்ண வேண்டும்; உறங்க வேண்டும்; மலசலம் கழிக்க வேண்டும். இதனை சமாளிக்க முடியாத இவர்கள் அடிப்படை வசதிகளைச் செய்து தரும்படி கேட்ட போது



மேரி வக்சலா பிள்ளைகள் ராஜினி, விநோத்துடன்
மறுபக்கத்தில் சந்திரசேகரன்



இவர்களுக்குக் கிடைத்தது அடியும், உதையும். அப்போது சந்திரனின் மனைவி கர்ப்பமாக இருந்தார். அவருக்கும் ஒழுங்காக மருத்துவ வசதிகள் வழங்கப்படவில்லை. சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பிறந்தது. காயம் ஆற முன்னரே தாயும் சேயும் உடனடியாக சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டனர். இப்படியும் நடக்குமா என ஆச்சரியப்படும் அளவிற்கு இவர்கள் கொடுமைகளை அனுபவித்தனர். தற்போது இவர்கள் இலண்டனில் இருக்கின்றனர். இவர்களுக்கு அகதி அந்தஸ்து இன்னமும் வழங்கப்படாமையினால் இங்கும் நிம்மதியாக வாழ முடியவில்லை.



**பிரேமாவதி :**

இவர் தற்போது செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றார். இவர் 1997ல் கைது செய்யப்பட்டு மதுரைச் சிறையில் அடைக்கப்பட்டார். இவர் மீது போடப்பட்ட வழக்கில் நீதிமன்றம் இவரை ஜாமீனில் விடுதலை செய்தும்; அவ்வாறு விடுதலை செய்யாமல் கியூ பிராஞ் உளவுப் பிரிவுப் பொலீஸ் இவரை மேலூர் சிறப்பு மூகாமில் அடைத்தனர். மேலூர் சிறப்பு முகாம் மூடப்பட்டதை அடுத்து இவர் மீண்டும் செங்கல்பட்டு சிறப்பு முகாமுக்கு மாற்றப்பட்டு உள்ளார். இவருடைய கணவர் நாதன் 1993ல் கைது செய்யப்பட்டு துரையூர் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டார். இரண்டு வருடங்களுக்கு மேலாக அடைத்து வைக்கப்பட்டிருந்த அவர் பின் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

சிறைக் கைதிகளின் விடுதலை தொடர்பாக சிலரிடம் கருத்துக் கேட்ட போது அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் கிழே தரப்படுகின்றன.



தயாபரன் :
(Brunel University. BSc Multi Media Student)

இந்த சமாதான காலத்தில் இதுவரை தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. என்பதை அறியும் போது ஆச்சரியமாகவும் கவலையாகவும் இருக்கின்றது. ஏன் இவர்களின் விடுதலைக்காக எமது எம்.பி.க்கள் முயற்சி செய்யவில்லை என்று விளங்கவில்லை. குறிப்பாக இந்தியாவில் சிறப்பு முகாம் என்ற பெயரில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழர்களை உடன் விடுதலை செய்ய வேண்டும். இச்சிறப்பு முகாம் சித்திரவதைகள் குறித்து கடந்த தேசம் இதழ்களில் வந்த செய்திகளைப் படித்து ஜனநாயக நாடு என்று சொல்லும் இந்தியாவிலா இப்படி நடக்கிறது என ஆச்சரியப்பட்டேன். இச்செய்திகள் என்னை மிகவும் பாதித்தன. அதனால் இச்செய்திகளை வெளி உலகிற்குக் கொண்டு செல்லும் ஒரு அங்கமாக எனது படிப்புப் Projectக்காக இவ்விடயங் களை ஒரு விவரணப்படமாக எடுக்கும் முயற்சியில் இறங்கி உள்ளேன்.

சேனன் :
(எழுத்தாளர்)

அனைத்து அரசியற் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டியவர்களே. இலங்கை இந்திய சிறைகளில் தங்கள் மனிதத்துவத்தை இழந்து கொண்டிருக்கும் அனைத்துத் தமிழ் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். இலங்கை இராணுவம் யுத்தக் கைதிகளை விடுதலை செய்த வரலாற்றைத் தவிர தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்த வரலாறு விடுதலைப் புலிகளுக்கு இல்லை. அதேவேளை இலங்கை, இந்திய அரசுகள் இருட்டுக்குள் வைத்திருக்கும் விடயங்களை வெளி உலகத்துக்குக் கொண்டுவர வேண்டியது அனைவரதும் கடமையாகும். 'அரசியல் கைது' என்ற கதைக்கே இடமில்லாது உலகை மாற்ற வேண்டிய போராட்டத்தில் அனைவரும் இணைந்து கொள்ள வேண்டும்.



கலாநிதி மு நித்தியானந்தன் :
(செய்திப் பொறுப்பாளர் தீபம் தொலைக்காட்சி)

கியூபா தீவாந்திரத்தில் 45 சதுர மைல் பரப்பில் அமெரிக்க அரசு பயங்கரவாத சந்தேக நபர்கள் என்று கருதப்படுபவர்களுக்காக பயங்கரவாத சிறைச்சாலை ஒன்றை நடத்தி வருகிறது. சட்ட நியாயங்கள் எட்ட முடியாத ஒரு நிலப்பரப்பில் நடத்தப்பட்டு வரும் நரகம் குவாண்டனமோ. தமிழ்நாட்டில் செங்கல்பட்டில் இலங்கைத் தமிழர்களுக்காக செங்கல்பட்டு சிறப்புமுகாம் என்ற பெயரில் மின்னாமல் முழங்காமல் ஒரு குவாண்டனமோ நடத்தப்பட்டு வருவது வெளியில் தெரிவதில்லை. சந்தேகப்படும் எந்த இலங்கைத் தமிழரையும் எந்தக் காரணமும் இல்லாமல் கியூபிரிவு பொலிஸ் கொடுங்கோலர்களால் இந்த சிறப்பு முகாமில் கேள்வி விசாரணைகள் இல்லாமல் அடைத்து வைத்திருக்க முடிகிறது. இதை அவர்கள் சிறை என்று

சொல்வதில்லை. ஆனால் சிறைச்சாலையை விட மோசமான கெடுபிடிகள், அகதிமுகாம் என்ற பெயரில் இங்கு நடத்தப்பட்டு வருகிறது. வெளிநாட்டு சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்து தடுப்புக்காவலில் வைக்கும் உரிமை மத்திய அரசிற்கு இருக்கிறதே தவிர மாநில அரசிற்கு அல்ல. இவர்கள் கைது செய்யப்படுவதாகவும் கூறப்படுவதில்லை. என்ன குற்றத்தின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள் என்றும் சொல்லப்படுவதில்லை. கைவிலங்கிட்டு சங்கிலியால் பிணைத்து ஒரு மனிதனை இழிவுபடுத்தி அடைத்து வைத்திருப்பது இங்கு சர்வ சாதாரணம். இந்த சிறப்பு முகாமில் வருடக்கணக்காக இலங்கைத் தமிழர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு வதை செய்யப்பட்டு வருகிறார்கள்.

இந்த சிறைக் கைதிகளின் மீட்சிக்காகக் குரல் கொடுக்க வேண்டியது உலகெங்கும் வாழும் தமிழர்களின் தார்மீகக் கடமையாகும்.



இர சிவலிங்கம்

அமரர் இர சிவலிங்கம் தன் வாழ்வின் இறுதிக் கணங்கள் வரை மலையக மக்கள் குறித்தே சிந்தித்து, எழுதி, செயற்பட்டு வந்தார். புதிய அத்தியாயம் படைக்க முனைந்த ஒரு போராளி.

இர சிவலிங்கம் உரிய கடவுச்சீட்டுடன் விசா பெற்று தமிழ்நாட்டுக்குச் சென்று தாயகம் திரும்பிய தமிழர்களின் உரிமைக்காகப் போராடினார். 1991ல் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்ட பின் தமிழ்நாடு பொலிஸ் நீலகிரி மாவட்டத்தில் தாயகம் திரும்பிய தமிழர்களை மிருக வேட்டையாடிய போது உரிமைக்குரல் எழுப்பியதால், கைது செய்யப்பட்டு; கைகளிலும் கால்களிலும் விலங்கிடப்பட்ட நிலையில் சிறப்புமுகாமில் சிறையிலிடப் பட்டு; வதையுற்றதன் கோர அனுபவத்தை இர சிவலிங்கம் மக்கள் மன்றம் ஏற்பாட்டில் விவரித்து எழுதிய கட்டுரைத் தொடரில் இருந்து சில வரிகள் கிழே தரப்படுகின்றது.

"............ நான் தொண்டாமுத்தூர் பொலிஸ் நிலையத்தில் உள்ள ஒரு காவலாளரிடம் சிறப்பு முகாம் என்றால் என்ன என்று வினவினேன். அதற்கு அவர் அங்கே உங்களுக்கு நல்ல உணவும், மெத்தை, கட்டில் போன்ற சகல வசதிகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ள இடம்தான் சிறப்பு முகாம் என்றார். அவர் எவ்வளவு கொடூரமான நகைச்சுவையுடன் இதனைக் கூறியுள்ளார் என்பதை அந்த செங்கல்பட்டு சிறப்பு முகாமுக்குள் நுழைந்த பிறகுதான் தெரிந்தது.

சிறப்பு முகாம் நிர்வாகிகளும் பொலிசாரும் மிககூர்க் கத்தனமாக நடந்து கொண்டார்கள். வெளியில் இருந்து பத்திரிகைகளோ உணவுப் பொருட்களோ உள்ளே வரக்கூடாது எனத் தடைசெய்தார்கள். நாகரீக நாடுகளில் காண முடியாது ஒரு அராஜகம், இன்றைய தமிழகத்தில் நிலவுகிறது. இலங்கைத் தமிழர்களை எவ்வித காரணமும் இன்றி சட்ட அடிப்படை இன்றி ஒரு போலி வாதத்தின் அடிப்படையில் சிறைக் கூண்டுக்குள் அடைத்து வைக்கும் ஒரு காண்டு மிராண்டித்தனமான போக்கு நிலவுகிறது. ...... அரசாங்கம் சட்ட விரோதமாகக் கொடுமை செய்கிறது. நீதிமன்றம் அதற்கு ஒத்து ஊதுகிறது. நீதியுணர்வுள்ள மனிதர்கள் என்ன செய்தார்கள்?" ❑

## நான் தனிமையில் இருக்கிறேனா?

இர சிவலிங்கம்

இது தனிமையா?
சின்னஞ்சிறு அறை
ஒழுக்கு, ஒன்பது அடிகாரக் கிருஷம்
இரும்புக் கதவுகள்
எப்பொழுதும் பூட்டியே இருக்கும்
ஆகவே தனிமையில் இருக்கிறேன்?

அப்புறம் அடுத்த அடுத்த அறைகளில்
அல்லோலங்கள், ஆவேசங்கள், ஆத்திரங்கள்
அசிங்கங்கள், அவலங்கள்
பிள்ளைகளின் அழுகுரல்
பெரியவர்களின் பேச்சுக்குரல்

பொலிசாரின் விசாரணைகள்
வியப்பான அனுதாபங்கள்
குசலம் விசாரிக்கும்
கியூ பிராஞ்ச் அதிகாரிகள்
சாப்பிட்டீர்களோ என வினவும்
சமையலறைத் தோழர்கள்
இது போதுமா சார்
என ஏங்கும் ஒரு சிறுவன்
ஆகா எப்படி எல்லாம்
மானுடம் என்னைத் தழுவிக் கொள்கிறது?
நான் தனிமையில் இருக்கின்றேனா அல்லது
என்னை இழந்த இனிமையில் மூழ்கிவிட்டேனா?

எல்லாவற்றுக்கும் மேலாய்
என்னுள் பொங்கி கொப்பளிக்கும்
எண்ணற்ற நினைவுகள், சிந்தனைகள்
அநீதி பற்றி, மனித உரிமை பற்றி
நமது மக்களின் நிலைபற்றி
தோழர்களின் துயரங்கள் பற்றி
தமிழினத்தின் தாழ்ந்த நிலை பற்றி
இலங்கைத் தமிழனின் இழிநிலை பற்றி

அநீதி என்பது அதிதூரத்தில் இல்லை
அபூர்வ நிகழ்வுமில்லை
நாள்தோறும் வாட்டுகின்ற வாடிக்கையாய் விட்டது
நாம் வாழும் தமிழகத்தில்
அநீதி நமது நிரந்தரத்துணைவன்
ஆகவே எரிமலை என்னுள் எழுந்து குமுறாதா?

முருகர் குணசிங்கம் கலாநிதி பட்டத்துக்கு எழுதிய ஆய்வு 'இலங்கை தமிழ் தேசியவாதம்'. யூன் 26ல் இலண்டனிலும் ஜூலை 8ல் பரிசிலும் வெளியிடப்பட்டது. இங்கே இலண்டன் நிகழ்வு தொகுக்கப்பட்டுள்ளது.

# இலங்கைத் தமிழ் தேசியவாதத்தின் ஊற்று ?

**சத்தியமூர்த்தி** (மொழியியல் துறையில் பயின்றவர்.) :

காலனியாதிக்கவாதிகள் எமது மதம், கலாச்சாரம் ஆகியவற்றை ஒடுக்கி தங்களது மதம், கலாச்சாரத்தினை திணிக்க முற்பட்டதால் தேசியவாதம் கூர்மையடைந்து முனைப்படைந்தது என்பதை இந்நூல் ஆதாரங்களுடன் தந்துள்ளது. மதத் திணிப்பில் போர்த்துக்கேயர் வன்முறையைப் பயன்படுத்தினார்கள். மாறாக ஒல்லாந்தர் நெகிழ்வுத் தன்மையுடன் செயற்பட்டார்கள். ஆங்கிலேயரின் நிலப்பிரபுத்துவ முறையான முதலாளித்துவக் கொள்கை, மற்றும் நீண்டகால ஒன்றிணைப்பினால் இனங்களிடையே முரண்பாடு எழுந்தது. ஆங்கிலேயரின் காலகட்டத்தில் கல்விக் கூடாக மதம்பரப்பல் மேற்கொள்ளப்பட்டதால் மத விழிப்புணர்ச்சி நடவடிக்கைகள் தீவிரமடைந்தது. சைவசமய மத விழிப்புணர்ச்சிக் குழுக்கள் தோன்றின.

**பரமலிங்கம்** (சட்டத்தரணி) :

காலனியாதிக்க வரலாற்றில் வன்னி ராச்சியம் இறுதிவரை போராடி 1803ல் ஆங்கிலேயரிடம் தோல்வி அடைந்தது. டச்சுக்காரர்களும் ஒல்லாந்தரும் தொடர்ந்தும் தமிழ் ராச்சியங்களை தனியாக நிர்வகித்தனர். ஆனால் சர்வதேச சட்ட விதிகளுக்கு மாறாக ஆங்கிலேயர் ஒற்றையாட்சியை ஏற்படுத்தியது மிகப்பெரும் தவறு. 1833ல் ஏற்படுத்திய கோல்புருக் அரசியல் சட்டம் மிகவும் மோசமானது. ஒரு மொழி இரு நாடா அல்லது இரு மொழி ஒரு நாடா என்று அன்றைய இடதுசாரிகள் சுட்டிக் காட்டினர். ஆனாலும் சமஸ்டிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. ஆறுமுகநாவலரை சமய, மொழி ஆர்வலர். ஒரு தேசியத் தலைவர் என்பதை குணசிங்கம் நிறுவி உள்ளார். அன்றும் தமிழ் மக்கள் ஆங்கிலேயரால் சமமாக நடத்தப்படவில்லை. யாழ்ப்பாணத்துக்கு புகையிரதம் போட 15 - 18 வருடங்கள் எடுத்துள்ளது. இதனால் தமிழ் மக்கள் அன்று அனுபவித்த கஸ்டங்களை இந்நூல் எடுத்துக் காட்டி உள்ளது.

**கலாநிதி நித்தியானந்தன் :**

19ம் நூற்றாண்டு யாழ்ப்பாணம் பற்றிய முக்கிய அவணம் இது. குணசிங்கம் பல வழிகளிலும் தகவல்களைத் திரட்டி உள்ளார். இதுவரை வெளிவந்திராத பல தகவல்களை இந்நூல் கொண்டிருந்தது.

குட்டையாக இருந்த சமூகத்தில் ஆங்கிலேயரது பொருளாதார திட்டமிடலை அடுத்து திடீர் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டது. நாங்கள் நினைக்கிறது போல சங்கிலியன் காலம் எல்லாம் பொற்காலம் அல்ல. மக்கள் சாப்பாட்டுக்கே கஸ்ரப்பட்டார்கள். போதனை செய்கிறேன் வருகிறீர்களா? என்று 16,000 பேர் கொண்ட கிராமத் தலைவரை பாதிரியார் கேட்ட போது நிறைய சோறும் கறியும் தந்தால் வருகிறோம் என்று யாழ்ப்பாணத்தில் இருந்த அக்கிராமத்தின் தலைவன் குறிப்பிட்டான். சோறு கறிக்கு 16,000 பேர் கிறிஸ்தவராக மாறத் தயாராய் இருக்கும் போது தேசியமாவது மண்ணாவது.

யாழ்ப்பாணத்துக்கு ரெயில் வர 15 வருடங்கள் மட்டும் தான் எடுத்தது. அனால் கொழும்பு - கண்டி ரெயில் 50 ஆண்டுகளுக்குப் பிறகு தான் ஓடத்தொடங்கியது.

ஆறுமுகநாவலர் பற்றி குணசிங்கம் Soft Corner ஒன்றை கையாண்டிருக்கிறார். ஆறுமுகநாவலர் சாதிய அமைப்பை மிகக் கடுமையாகக் கடைப்பிடித்தவர். அவரது பாடசாலையில் தாழ்த்தப்பட்டவர்கள் சேர்க்கப்படுவதில்லை. கிறிஸ்தவ மிசனரிகளில் தாழ்த்தப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டதால் வெள்ளாளர்களை வெளியேறும்படி ஆறுமுகநாவலர் வலியுறுத்தினார்.

அடுத்து மத்திய மலைநாட்டில் 5,00,000 தமிழகத் தமிழர்கள் குடியமர்த்தப்பட்டனர். (வடக்கு சனத்தொகை 3,00,000). மலையகத் தமிழர்களின் எண்ணிக்கை 10,00,000 ஆக அதிகரித்து இருந்த வேளை அவர்கள் அனைவரும் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர். இதில் தமிழ் அரசியல் தலைவர்கள் தீர்க்க தரிசனம் இல்லாமல் நடந்தனர்.

தேசியம் என்பது கட்டமைப்பு, தமிழீழம் என்பது State of Mind என்று முறையே அன்றசன், சிவநாயகம் ஆகியோர் தெரிவிக்கின்றனர். தமிழ் தேசியவாதத்தின் ஊற்று 100 வருடங்களுக்கு முன் இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. குணசிங்கத்தின் ஆய்வு அவரது thesis க்கு எதிராகவே அமைந்து உள்ளது.

தலைமை : **யமுனா ராஜேந்திரன்** :

தேசியவாதம் மேற்கேயே தோன்றியது. கடந்த 50 ஆண்டுகளில் பல நூல்கள் வெளிவந்துள்ளது. காலனியாதிக்கத்தின் கீழ் தமிழ் தேசியவாதம் பிரிக்கப்பட முடியாதது. தமிழக தேசியவாதம் மதசார்பற்றது. ஈழத்து தேசியவாதம் சைவத் தமிழ் தேசியவாதமாக உள்ளது. சர்வதேச சட்ட விதிகளுக்கு மாறாக ஆங்கிலேயர் ஒற்றையாட்சியை ஏற்படுத்தினர் என்பது அர்த்தமற்றது. காலனியாதிக்கம் என்பதை சட்டபூர்வமான விவாதத்துக்கு கொண்டு வருவது மிகவும் கடினம்.

நூலாசிரியர் : **முருகர் குணசிங்கம் :**

தேசியவாதத்தைக் கோடிட்டு எல்லைக்கு உட்படுத்த முடியாது. மதத்தினதும் கலாச்சாரத்தினதும் விழுமியங்களையும் பாரம்பரியங்களையும் காலனியாதிக்க சக்திகளிடம் இருந்து பேணுவதற்கும் பாதுகாப்பதற்கும் கிளர்ந்த எழுச்சி இலங்கைத் தமிழ் தேசியவாதத்துக்கு வித்திட்டது. இதனை எமது கலை கலாச்சார பின்னணியுடன் சேர்த்தே பார்க்க வேண்டும். ❑

## இலங்கையில் நடைபெறும் படுகொலைகள் தொடர்பாக இலங்கையர் ஜனநாயக அரங்கம் யூலை 7ல் வெளியிட்ட செய்திக் குறிப்பின் திருத்திய வடிவம்

# சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்கும் ஒரு அச்சுறுத்தல்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுக்கு எதிராக ஜுலை 7ல் செய்யப்பட்ட தற்கொலைத் தாக்குதல்; தாமே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை வலியுறுத்த, புலிகளினால் தமக்கு எதிரானவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலாக அமைந்து உள்ளது. யுத்த நிறுத்தத்தின் போது, எதிராளிகள் மீதான தாக்குதல்களினால், அரச உயர் மட்டத்திலிருந்தவர்கள் பாதிக்கப்பட்டாலும் கூட, தென்னிலங்கை மற்றும் சர்வதேச சமூகங்கள் இவற்றை தமிழர்கள், தமிழர்களுக்கு எதிராக செய்யும் வன்முறை கள் எனக் கருதுகின்றன.

அரசாங்கப் பேச்சாளரான ரிம் பீரீஸ் றொய்ட்டருக்கு அளித்த பேட்டியில், "சமாதான முயற்சிகள் வழக்கம் போலத் தொடரும்........ இது எல்.ரி.ரி.யினர் தமது ஒரு எதிராளியைக் கொல்ல எடுத்த நடவடிக்கையே அல்லாது மீண்டும் போர் தொடுக்கும் நடவடிக்கையல்ல" எனக் கூறியுள்ளார். தேசிய சமாதானக் கவுன்சிலின் அறிக்கை, சமாதானத்தைக் காப்பாற்ற, புலிகள் தமக்கு எதிரானவர் களைக் கொல்ல எடுத்த முயற்சியென நியாயப்படுத்த முயலுகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது சிங்கள அரசியல் தலைவர்கள் படுகொலை இலக்குகளாய் இருப்பது தவிர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் இது தமிழ் மக்கள் மீதான கொலை வெறியாட்டத்தை தடுக்க வில்லை. 1989லும் 1990களிலுமே ஜனாதிபதி பிரேமதாசாவுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும் போதே தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் அ. அமிர்தலிங்கம், வெ. யோகேஸ்வரன், சாம் தம்பிமுத்து ஆகியோர் கொல்லப்பட்டனர். ரணில் விக்கிரமசிங்காவுடன் ஆரம்பித்த தற்போதைய போர் நிறுத்தத்தின் போது ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுபத்திரன் ஜுன் 14 2003இல் கொலை செய்யப்பட்டார்.

சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை போரில் செய்யப்படும் குற்றங்களாகக் கருதுகின்றன. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் 1.2 பந்தி இரு தரப்பினரும் சகல இராணுவ நடவடிக்கைகளையும், தற்கொலைக் குண்டுகள் உட்பட அரசியற் படுகொலைகள் ஆகியவற்றையும் தவிர்க்க வேண்டுமென்று கூறுகின்றது.

ஆனால் சமாதானப் பேச்சுவார்தையின் போது தாம் விரும்புவதை (இடைக்கால நிர்வாகம்) பெறாவிட்டால் மீண்டும் போரை ஆரம்பிக்கப்போவதாக புலிகள் மிரட்டுகின்றனர். படுகொலைகள், குழந்தைகளை படையில் சேர்த்தல் போன்ற நடவடிக்கைகளினால் போர் வரும் அபாயம் இருப்பதாக பிரமையை உண்டாக்கி மக்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்கின்றனர்.

இலங்கையின் சமாதான முயற்சிக் காலங்களில், ஒரு வருந்த வேண்டிய உண்மை என்னவென்றால், வன்முறைகளை விட்டுவிட வேண்டுமென உறுதிமொழி கேட்கப்படவில்லை. மாறாக எந்தவிதமான எதிர்ப்பும் இன்றியே பயங்கரவாதத்தைத் தொடர ஆயுத அமைப்பு கள் அனுமதிக்கப்பட்டனர்.

புலி இயக்கத்தின் ஒரு பகுதியினராக இருந்த கருணா குழுவினரும் தமது வன்முறைகளை விட்டுவிட வேண்டும். இலங்கையர் ஜனநாயக அரங்கம் சகல கொலைகளையும், குறிப்பாக கடந்த மாதங்களில் கிழக்கிலங்கையில் அதிகரித்து வரும் பரஸ்பர இயக்கக் கொலைகளையும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

சமீபத்திய நிகழ்வு தமிழ் அரசியலில் அடிப்படையான மாறுதல் அவசியம் என்பதை வலியுறுத்துகின்றது. அரசியலில் மாற்றுக் கருத்துக்கள் அனுமதிக்கப்படுவ துடன் ஜனநாயக பன்முகக் கட்டமைப்பில், அரசியல் கட்சிகள் தமது வித்தியாசமான கருத்துக்களுடன் சுதந்திரமாக இயங்க வேண்டும்.

தமிழ் அரசியல் வாதிகளின் உயிர்கள் மதிப்பு குறைந்தவை என எண்ணும் பேரினவாத சிந்தனையை மறுக்கும் முக்கிய கடமையும் சிவில் சமூகத்திற்கு உண்டு. மறுபுறத்தில், மனித உரிமைகளை வலியுறுத்தி தனி மனிதர்களின் பாதுகாப்பையும் கௌரவத்தையும் மதிக்கும் சமாதானத்திற்காக சிவில் சமூகம் உழைக்க வேண்டும். ❑

## படுகொலைகளுக்குக் கண்டனம்

வி.புலிகளும் கருணா அணியினரும் உடனடியாக படுகொலைகளை நிறுத்த வேண்டும் என Human Right Watch அமைப்பு வற்புறுத்தி உள்ளது. யூலை 28ல் வெளியிடப்பட்ட அறிக்கையில், மக்களை பயங்கரத்துக்கு உள்ளாக்கி அடிப்படை உரிமைகளான சுதந்திரமாகச் சேர்தல், கதுத்துக்களை வெளியிடுதலை அனுபவிக்க விடாமல் தடுப்பதே இப்படுகொலைகளின் நோக்கம் எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. யூலை 8ல் இருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டதை கண்டித்துள்ள அவ்வமைப்பு கொட்டாவா கொலையாளிகளை இலங்கை அரசிடம் வி.புலிகள் ஒப்படைக்க வேண்டும் என கேட்டுள்ளது. குற்றவாளிகளுக்கு பாதுகாப்பளிப்பது சட்ட விதிகளை அவமதிப்பதாக அமையும் என்றும் தெரிவித்தள்ளது. ❑

# MOVEMENT FOR REFUGEE REHABILITATION AND HUMAN RIGHTS

South Asian Branch
Amnesty International
99-119 Rosebery Avenue
London
EC1R 4RE
UNITED KINGDOM

சி பாலச்சந்திரன்
செயலாளர்
அகதிகள் புனர்வாழ்வு மற்றும் மனித உரிமைக்கான இயக்கம்.

28 யூன் 2004

**படுகொலைகளை தடுத்து நிறுத்தவும் கைதிகளை விடுதலை செய்யவும் வழிசெய்யக் கோரிக்கை**

இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் இதுவரை பல அரசியல் படுகொலைகள் இடம்பெற்று உள்ளன. இப்படுகொலைகள் வடக்கு கிழக்கில் மாத்திரமன்றி கொழும்பு உட்பட இலங்கை பூராவும் நடந்துள்ளது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் இவ்வாறு நிகழ்ந்து உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மாற்றுக் கருத்துக் கொண்ட போராளிகள் மட்டுமன்றி பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊடகவியலாளர்கள், முன்னாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வேட்பாளர்கள், அரச அதிபர் மற்றும் பொது மக்கள் ஆகியோர் கொல்லப்பட்டு உள்ளனர். இப்படுகொலைகளின் போது ஆண்கள், பெண்கள் மட்டுமன்றி சிறு குழந்தைகளும் கொல்லப்பட்டு உள்ளனர். குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளில் ஏற்பட்ட உடைவுக்குப் பின்னர் இவ்வாறான கொலைகள் அதிகரித்து உள்ளன. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் 2000க்கு மேற்பட்ட யுத்த நிறுத்த மீறல் சம்பவங்களில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு குற்றம்சாட்டி உள்ளது. அதேவேளை கிழக்கு மாகாணத்தில் அண்மையில் நிகழும் கொலைகளில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பின்னணியில் இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கம் குற்றம்சாட்டி உள்ளது. இவ்வாறான தொடரும் கொலைகளால் பாதுகாப்பற்ற சூழ்நிலையே இலங்கையில் காணப்படுகிறது. இது குறித்து பல தடவைகள் வலியுறுத்தியும் நோர்வே மத்தியஸ்தக் குழுவினர் பயனளிக்கும் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. எனவே இலங்கையில் நிகழும் அரசியல் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும் கொலையாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இதற்கு சர்வதேச மன்னிப்புச்சபை வழிகோல வேண்டும்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு கிட்டத்தட்ட 2 வருடங்கள் கழிந்த பின்னரும் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. இலங்கையில் மாத்திரமன்றி இந்திய சிறை மற்றும் சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் கைதிகள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும். இலங்கை, இந்திய அரசுகள் மட்டுமின்றி விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் கைது செய்யப்பட்டு நீண்ட நாட்களாக அடைத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் அனைவரையும் உடன் விடுதலை செய்ய சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்த வேண்டும் என தாழ்மையுடன் கேட்டக் கொள்கிறோம்.

## தமிழ் சிறார்களின் உயிர்கள் ஆபத்தில்

### சர்வதேச மன்னிப்புச்சபை

சர்வதேச மன்னிப்புச்சபை யூலை 7ல் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கிழக்கு மாகாணத்தில் இரவு வேளைகளில் வி.புலிகள் பலாத்காரமாக சிறுவர்களை கடத்திச் செல்வதாக குற்றம்சாட்டி உள்ளது. பெற்றோர் உறவினர் அதனை தடுக்க முற்பட்ட போது சின்னத்தாற்று முனையில் ஒரு வீடு எரிக்கப்பட்டும் இன்னும் 9 வீடுகளின் கதவுகள் உடைக்கப்பட்டும் உள்ளது என்றும்; வாகரையில் தங்கள் சிறுவர்களை கடத்திச் செல்வதை தடுக்க முற்பட்ட உறவினர்கள் தடியினால் மோசமாகத் தாக்கப்பட்டு உள்ளனர் என்றும் அச்செய்தி அறிக்கை கூறுகிறது. இன்னொரு சம்பவத்தில் ஒரு பெண் தாக்கப்பட்டதில் மயக்கமுற்று விழுந்துள்ளார் என்றும் இன்னொருவர் முகத்தில் வெட்டப்பட்டார் என்றும் இவ்விருவரும் சிகிச்சை பெறும் நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்றும் அவ்வறிக்கை தெரிவிக்கிறது.

இன்னொரு யுத்தம் இடம்பெற்றால் இச்சிறுவர்களே முதலில் மரணிப்பார்கள் என அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. கருணாவின் பிளவுக்குப் பின் பெரும்பாலும் கிழக்கில் 190 சிறார்கள் பலவந்தமாக வி.புலிகளின் படைகளுக்குச் சேர்க்கப்பட்டு உள்ளதாக அக்கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இவ்வாண்டு பலவந்தமாகச் சேர்க்கப்பட்ட சிறார்களின் எண்ணிக்கை 330 உயர்ந்துள்ளதாக அவ்வறிக்கை தெரிவிக்கிறது.❑



முஹம்மது
எஸ்.ஆர்.நிஸ்த்தார்
சமூகவியல் ஆய்வாளர்

# சுயநிர்ணய உரிமை :

# தமிழர் = சோனகர்

முஸ்லீம்கள் சோனகர் என்ற தமது இனப்பெயரில் அரசியல் நடத்துவதே அரசியல் சாணக்கியமாகும். சோனகர் என்போர் இலங்கையில் மாத்திரமல்ல, மொரோக்கோ தமிழ்நாட்டின் சில பகுதிகள் பிலிப்பைன்ஸ் ஆகிய இடங்களிலும் வாழ்வதால் இலங்கையில் உள்ளோர், இலங்கைச் சோனகர் (Ceylon Moor) என அழைக்கப்படுக்கின்றனர். இலங்கைச் சோனகர் தனி இனம். ஒரு தேசியம் (Nation). அத் தேசியம் தனது விவகாரங்களைத் தானே கவனிக்கும் சுயநிர்ணய உரிமை (Right to Self Determination) உடையது.

இந்த சுயநிர்ணய உரிமை என்பது ஐ.நா. சபையினாலும், அதற்கு முன் 1993இல் மொன்டிவேடியோ ஒப்பந்தத்தாலும் (Montevideo Convention), ஏன் இன்றைய ஐரோப்பிய ஒன்றியத்தாலும் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒன்று. இருந்தும் இந்த ஸ்தாபனங்களும் அதன் கட்டுப்பாட்டாளர்களும் காலத்தின் தேவைக்கும் பிரதேசத்தின் அக, புறச் சூழலுக்கும் ஏற்றவாறு மிகக் குறிப்பாகத் தங்கள் நாட்டின் அரசியல் பொருளாதார நலன்களைக் கருத்தில்கொண்டு வியாக்கியானம் செய்வதும் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதும் ஏற்க மறுப்பதும் உலக அரசியலில் புதிதல்ல.

முன்னைய யூகோஸ்லாவியாவில் இருந்து சர்வதேசச் சட்டங்களுக்கமைய ஐ.நா.சபையின் அங்கீகாரத்துடன் பிரிந்து சென்ற குரொவேசியா, சுலொவெனியா, பொஸ்னியா - கேசர்கொவினா என்ற நாடுகளுக்கு 1992 இல் ஐரோப்பிய ஒன்றியம் சர்வதேச சட்டங்களுக்கு மேலாக பல நிபந்தனைகளை முன்வைத்தே அவற்றின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டது. அதே நேரத்தில், இந்தானேசியாவிலிருந்து 3 வருடங்களுக்கு முன் பிரிந்து சென்ற கிழக்குத் தீமோருக்கு அத்தகைய நிபந்தனைகள் இல்லாததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மறுபுறத்தில் உலகத்தில் வலுப்பெற்றுவந்த இஸ்லாத்தின் இருப்புக்கெதிராக அன்றைய பாப்பரசர், இரண்டாம் ஏர்பான்/உர்பான் (Urban II) 1095களில் ஐரோப்பாவில் தொடக்கி வைத்த சிலுவை யுத்தம் (Crusade) வெவ்வேறு வடிவங்களில் இன்று வரையும் தொடர்கிறது. இனியும் தொடரும் என்பதை சராசரி அறிவுள்ள எந்த மனிதனும் மறுக்கமாட்டான். அந்த வகையில் இன்று முன்னணியில் நிற்பது (இஸ்லாமிய) பயங்கரவாதத்துக்கு எதிரான போரென்று அழைக்கப்படும் அணுகுமுறையும், தனிமனித சுதந்திரத்தை வலியுறுத்தும் மனித உரிமைகள் அணுகுமுறையுமாகும். இவை இன, மத, மொழி, பால், வயது வேற்றுமையின்றி கேள்வியின்றி எல்லோராலும் கரிசனை காட்டப்படுகின்றது.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலோ அல்லது தனிமனித உரிமை மதிக்கப்பட வேண்டும் என்பதிலோ முஸ்லிம்கள் என்ற வகையில் நாம் யாருக்கும் இரண்டாம் தரமானவர்கள் அல்ல. போர்ச் சூழலிலும் கூட பயங்கரவாதத்துக்கு இடமில்லை என குர்ஆன் கூறுகிறது. அதே நேரத்தில் தற்பாதுகாப்பிற்கா கவும் சொந்த மண்ணில் நாம் அடக்கி ஒடுக்கப்படும் போதும் சொந்த மண்ணில் இருந்து விரட்டியடிக்கப்படும் போதும் புனிதப்போரை (ஜிஹாத், Holy War) எமக்கு நிபந்தனையுடன் இஸ்லாம் அனுமதிக்கின்றது.

இங்கே நாம் இனத்தை முதன்மைப்படுத்துவது மதத்தை முற்றாக மறக்க வேண்டும் என்பதற்காகவல்ல. ஆனால் நமது மத அடையாளத்தை அரசியல்ரீதியில் கேள்விக்குறியாக்கும் எமது இன அடையாளத்தை முதன்மைப்படுத்துவது தவிர்க்க முடியாதது.

சிங்களப் பேரினவாதம் எப்படித் தமிழ்த் தேசியத்தை அடக்கவோ அழிக்கவோ உரிமையற்றதோ அதேபோல் தான் தமிழ் இனவாதம் சோனகர் இனத்தை அடக்கவும் அழிக்கவும் உரிமையற்றது.

கலாசாரக்குழு, சமயக்குழு, தமிழ்பேசும் மக்கள் என்றெல்லாம் எமது அடையாளத்தை குறுக்கி நமது ஜனநாயக இருப்புரிமையை கேள்விக்குட்படுத்தக்கூடாது. சேர்ந்து வாழ்வதென்பது எமது சுயவிருப்பத்தின் அடிப் படையில் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம். அடையாள குறுக்கலின் மூலம் பயமுறுத்தி அடக்கியாள நினைப்பது பிறிதோர் விடயம். அதற்கு நாமும் துணைபோகக்கூடாது.

ஆக ஒரு சமயக்குழுவாக சுயநிர்ணய உரிமையை கோருவதைவிட இன அடிப்படையில் நமது இனத்தின் சோனகர் என்ற தனித்தபெயரின் கீழ் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது இன்றைய காலத்தின் தேவை.

இனம் என்ற ஒன்று வலுவுள்ளதென்பதை நாம் பறைசாற்றிக் கொண்டுதான் இருக்கின்றோம். உதாரணம் அரபுலீக் அரபு வெளிவிவகார அமைச்சர்கள் மகாநாட்டில் ஏனைய அரபுக்களற்ற முஸ்லீம் நாடுகளுக்கு அலுவல்கள் இல்லை. ஈரான் - ஈராக் யுத்தத்தில் இரண்டு முஸ்லிம் நாடுகள் என்பதைவிட அரபு - பாரசீகம் என்பது முதன்மை பெற்றிருந்தது. ஒடுக்கும் துருக்கியும் ஒடுக்கப்படும் குர்திஷ் மக்களும் அடிப்படையில் முஸ்லிம்கள் என்பதைவிட இனம் முதன்மை பெற்றுள்ளது. ஈரான், ஈராக், துருக்கி மூன்றும் குர்தீஸ் மக்களை முஸ்லிம் என்று மட்டும் மதித்திருந்தால் உலகத்தில் ஒப்புவமையற்ற நீண்டகால குர்திஸ்தான் என்ற நாட்டுக்கான விடுதலைப் போராட்டம் ஏற்பட்டிருக்காது. ஆப்கானிஸ்தான் உட்பூசலில் சம்பந்தப்பட்ட எல்லோருமே முஸ்லீம் என்பதைவிட "புஸ்தூன்" என்ற பேரினவாதமும் கூடவே குலகோத்திர வாதங்களும் முதன்மை பெற்றுள்ளன. இன்று சிதைவுற்று உள்ள சோமாலியா, அரசொன்றில்லாமல் தத்தளிக்க அந்நாட்டவர் பெரும்பான்மை முஸ்லீம் என்பதைவிட கோத்திர சண்டைகளே முழுக்காரணமாக உள்ளன.

இங்கே நாம் மிகவும் கவனமாக நோக்க வேண்டிய விடயம், நாம் இனத்தின் பெயரைத் தூக்கிவிடுப்பது மற்றைய முஸ்லிம்களிலிருந்து நம்மைப் பிரித்துக் காட்டவல்ல. நாம் இனத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க முற்படுவது சமயத்தால் முஸ்லீம்களல்லாத ஏனைய இனங்களிலிருந்து நம்மை அடையாளப்படுத்தவேயாம். ஏனைய இன்னல்கள் தொடர்பான விடயங்களில் நமது உரிமையை சுட்டிக்காட்டவும் பெறவுமே தவிர யாரின் உரிமையையும் பறிக்கவோ மறுக்கவோ அல்ல.

## தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எதுவாகவும் இருக்கலாம். அவர்கள் எதை விரும்புகிறார்களோ அதையே நாமும் அவர்களுக்கு விரும்புகின்றோம்.

எனவே எது, எங்கு, ஏன் முதன்மை பெற வேண்டும் என்பதை நாம் தூரநோக்கில் சிந்திக்க வேண்டும். இலங்கையின் பிரச்சினை இனங்களின் பிரச்சினை என்பதால் இருபக்க இனத்துவக் கூர்மைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி இருப்பதால் சேர்ந்து வாழ வேண்டிய தேவையுண்டு என்பதால் இனங்களுக்கிடையே புரிந்துணர்வும் உரிமைகளை மதிக்கும் குணமும் வேண்டும். அச்சம் நீக்கப்பட வேண்டும். நம்பகத் தன்மை அதிகரிக்கப்பட வேண்டும்.

தமிழர் பிரச்சினைக்கான தீர்வு எதுவாகவும் இருக்கலாம். அவர்கள் எதை விரும்புகிறார்களோ அதையே நாமும் அவர்களுக்கு விரும்புகின்றோம். இதில் கருத்து வேறுபாடு கிடையாது. ஆகவே சுயநிர்ணய உரிமை அவர்களுக்கு எப்படியோ நமக்கும் அப்படியே. இதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு நாம் தனி இனம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். ❑

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

SOLICITORS

Rengan N Devarajan

Immigration & Nationality
Employment
Land Lord & Tenant
Housing
Welfare Benefits
Matrimonial

Tel : 020 8478 5797
Fax : 020 8478 4486

1ST Floor
128 Ilford Lane, Ilford
Essex, IG1 2LE

# ஏன் சோனகர் ?

ஆதிவாசி

கடந்த தேசம் இதழில் 'இலங்கை மூஸ்லீம்கள் - சோனகர்' என்ற தலைப்பில் இன அடையாளம் குறித்து திரு எஸ் ஆர் நிஸ்தார் அவர்களின் கட்டுரையை வாசித்தேன்.

சோனகர் குறித்த பல்வேறு கருத்துக்கள் உள்ளன. இலங்கை வாழ் இஸ்லாமியர்கள் சோனகர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால் இந்தியாவில் இஸ்லாமியர்கள் சோனகர் என்று அழைக்கப்படுவதில்லை.

இஸ்லாமியர் வாழ்க்கையில் வணிகம், கப்பல், கடல் ஆகியவை ஒரு காலத்தில் முக்கியமான இடத்தைப் பிடித்திருந்தது. கடல் வணிகத்தில் பல தரப்பட்ட பணிகள் நடைபெற்றன. இதில் ஒவ்வொரு பணி செய்பவரும் ஒவ்வொரு பெயர் கொண்டு அழைக்கப்பட்டனர். மரக்காயர் என்பதைப் போலவே கப்பல் சேவைக்கான ஒரு பிரிவினர் சோனகர் என்று அழைக்கப்பட்டனர். கப்பலை செலுத்துவதில் இவர்களுக்கு ஒரு முக்கிய பங்கு உண்டு.

ஆனால் இலங்கையில் முழு இஸ்லாமியர்களும் சோனகர் என்றே குறிப்பிடும் வழக்கத்தைத் தொடர்ந்து வருகிறார்கள். நோட்டியர் தமிழ் அகராதியில் முஸ்லீம் / இஸ்லாமியர் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. சோனகர் என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டு உள்ளது. இந்த நோட்டியர் தமிழ் அகராதி 1834ல் அச்சிடப்பட்டு உள்ளது.

இலங்கையில் அரசு சார்ந்த அனைத்திலும் மூர்ஸ் (Moors) என்ற சொல்லே பயன்படுத்தப்படுகிறது. இலங்கையில் இஸ்லாமியரை அழைக்கப் பயன்படுத்தப்படும் மற்றொரு சொல் இது. மூர்ஸ் என்பது வட ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள அரபு இனத்திற்கும், பெர்பர் இனத்திற்கும் இடையில் ஏற்பட்ட கலப்பால் உருவானது.

ஆனால் தமிழ் பேசும் முஸ்லீம்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள இலங்கை இஸ்லாமிய சமூகத்திற்கு ஏன் சோனகர் என்று பெயரிட்டு அழைக்கப்பட வேண்டும்? இது ஒரு வரலாற்றுத் திரிபு. இவர்களது இனரீதியிலான தொடர்பு தமிழினத்துடன் இல்லை என்பதை நிறுவுவதற்காகத்தான் இந்தப் பெயர் சூட்டல் என்று பல அறிஞர்கள் கருதுகிறார்கள். தமிழர்களும் தமிழ் பேசும் முஸ்லீம்களும் வரலாற்று ரீதியாக இணைந்துவிடக் கூடாது என்பதற்கான வரலாற்று சூழ்ச்சி இது என்று சந்தேகிப்பதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன.

ஆதார நூல்கள் :

தீக்குள் விரலை வைத்தேன் - சி மகேந்திரன்.

பௌத்த சிங்களவரும், சிறுபான்மையினரும் - ச கீதபொன்கலன்

# புலம்பெயர்ந்த நெடுந்தீவு :

யாழ்ப்பாணத்தில் இருந்து நெடும் தொலைவில் இருப்பதால் நெடுந்தீவு என அழைக்கப்பட்ட இத் தீவகத்தினர் இன்னும் நெடும் தூரம் புலம்பெயர்ந்து யூன் 27ல் இலண்டன் வெம்பிளியில் ஒன்று கூடினர்.

நெடுந்தீவு ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு சி குலசபாநாதன் தலைமையில் இடம்பெற்றது. இசை, நடன நிகழ்ச்சிகளுடன் செ சுரேசினால் தொகுக்கப்பட்ட கலங்கரை விளக்கம் எனும் சிறுநூல் வரலாற்று எச்சங்களைக் கொண்ட வண்ணப் படங்களுடன் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பெற்றிருந்த வளத்தாலும் அமைந்திருந்த கேந்திர முக்கியத்தவத்தாலும் வரலாற்றோடு இணைந்து, பல நூற்றாண்டுச் சிறப்பைப் பெற்ற நெடுந்தீவு இன்று அத்தியவசிய தேவைகள் பலவற்றைக்கூட இழந்து நிற்பதாக அமைப்புக் குழு உறுப்பினரும் பத்திரிகை யாளருமான க மகாலிங்கசிவம் குறிப்பிட்டு உள்ளார்.

வடதுருவ நோர்வே முதல் தென்துருவ நியூசிலாந்து வரை பரந்து இருக்கும் நெடுந்தீவு மக்கள் மனம் வைத்தால் 35 சதுர மைல் அளவே கொண்ட தீவை மேம்படச் செய்யலாம் என ஒன்றியத் தலைவர் சி குலசபாநாதன் தெரிவித்து உள்ளார்.

இலங்கையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீவுகளில் நெடுந்தீவு முக்கியமானது. வெடியரசன் கோட்டை, போர்த்துக்கேயரின் கோட்டை, ஒல்லாந்தரின் புறாக்கூடு, வெளிச்ச வீடு, குயின் ரவர், குதிரை நிலையம், தூண்கால் குதிரைமையம், தனிநாயகம் அடிகள் சிலை என வரலாற்றின் எச்சங்களை இன்றும் தாங்கி நிற்கிறது நெடுந்தீவு. இலங்கைப் படைகளின் இன அழிப்பின் சான்றான குமுதினிப் படுகொலை நினைவுத்தூபி கொல்லப்பட்டவர்களின் பெயர்களைத் தாங்கி நிற்கிறது.




கலங்கரை விளக்கம் நூலை விரிவாக்கி நெடுந்தீவின் வரலாற்றை மீள்பதிவு செய்வது மிக நன்மைபயக்கும். இதனை முன்மாதிரியாகக் கொண்டு ஒவ்வொரு ஊரவரும் தம்தம் ஊர் வரலாற்றை பதிய முன்வரவேண்டும். ஒன்றியத்தின் விழா இராப்போசனத்துடன் இனிதே நிறைவுற்றது.



ரி கொன்ஸ்ரன்ரைன்

# பாபாவும் ஐக்கினும் சொக்கனும்

லண்டனில் இருந்து புதிதாக வெளிவரும் ஒரு பேப்பரில் எழுத்தாளர் விமல் சொக்கநாதன் புட்டபத்தி சுவாமி சாய்பாபா தொடர்பாக BBC தொலைக்காட்சி ஒளிபரப்பிய நிகழ்ச்சியை திட்டித் தீர்த்துள்ளது மிகவும் நியாயமற்றது. இந்நிகழ்ச்சியை வழங்கிய BBC தொலைக் காட்சியின் பெண் நிருபர் டானியா டத்தாவை சேரிப்புற நாய் எனவும் பொறுக்கி நாயாகவும் வர்ணித்துள்ளார். விமல் சொக்கநாதன் முன்னாள் BBC அறிவிப்பாளர். பிரித்தானிய அரசினதும் முதலாளித்துவ அமைப்பினதும் நலன்களைப் பேணுகின்ற BBC, Secret Swami போன்ற பல நல்ல விவரணங்களையும், புலனாய்வுகளையும் தருகின்றது.


ஒட்டுமொத்தமாகப் பார்க்குமிடத்து சாய்பாபாவை நியாயப்படுத்தி விமல் சொக்கநாதன் முன்வைக்கும் ஒரே ஒரு நியாயம் என்னவெனில் சுவாமி பாபா நூற்றுக்கணக் கான நாடுகளில் பல லட்சக்கணக்கான மக்களால் அவதார புருஷர் என வழிபாடு செய்யப்படுபவர் என்பதே.

நூற்றுக்கணக்கான நாடுகளில் கோடிக்கணக்கான மக்களால் சாயிபாபா வழிபடப்படுவதால் ஏனைய அனைவரும் கண் மூடித்தனமாக அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. அதே நேரம் கோடிக்கணக்கான மக்கள் ஏற்றுக்கொள்வதால் அந்த விடயம் சரியானதாக அமைந்து விடுவதும் இல்லை.

ஸ்ரீலங்காவில் பெரும்பான்மையான 82 வீதமான மக்கள் தமிழ் ஈழம் தேவையில்லை என்கிறார்கள். பெருமளவு மக்கள் சரியென்பதால் அது சரியாகிவிடுமா. பல இலட்சம் யூதர்களை சர்வாதிகாரி கிட்லர் நச்சுவாயு அடித்துக் கொலை செய்தபோதும் கிட்லர் சென்ற இடம் எல்லாம் இலட்சக் கணக்கான மக்கள் குவிந்து வரவேற்றனர். இறுதியில் நடந்தது என்ன?

சுவாமி பாபாவும் அவரது ஆச்சிரமமும் ஒரு களங்க மற்ற தேவலோகம் என வர்ணிப்பது ஒரு பம்மாத்து. ஆச்சிரமத்தில் கொலை நடந்து இருக்கின்றது. அது நியாயமாக விசாரிக்கப்படவில்லை. இதைத் தொடர்ந்து பல அதிகாரிகள் மர்மமாக பதவி விலகியுள்ளனர். ஓர் பொறுப்பில் இருந்த அமைச்சர் பதவி விலகி ஆச்சிரமம்

SELECT
ESTATES & LETTINGS LTD
✓ SALES
✓ LETTINGS
✓ MAINTENANCE
✓ MORTGAGES



*Professional Service*
*Rent Guarantee Scheme*
*Quality Tenants*
*Competitive Sale Commission*
*Mortgages Arranged*

288 High Street North, Manor Park, London, E12 6SA
Tel : 020 8470 1500 Fax : 8470 9800 Mob : 07956 150 580
email : bose@selhouses.co.uk website : www.selhouses.co.uk

மீது கொலை விசாரணை விவகாரங்களை கடுமையாக கண்டித்துள்ளார்.

சுவாமி பாபா ஓரின உடலுறவில் ஈடுபட்டிருந்தால் அதில் என்ன தவறு இருக்கிறது என வினவுகிறார் முன்னாள் நிதிப்பொறுப்பாளர். பாபா ஓரினச் சேர்க்கை உடையவரா அல்லது இருபாற் சேர்க்கை உடையவரா அல்லது பல்லினச்சேர்க்கை உடையவரா என்பதல்ல பிரச்சினை. ஒருவருடைய விருப்பத்திற்கு மாறாக அவரை பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தி உள்ளார். சிறுவர்களை தனது பாலியல் தேவைகளுக்குப் பயன்படுத்தி உள்ளார். கண்ணை மூடிக்கொண்டு பால் குடித்தால் மட்டும் உலகம் இருண்டு விடாது.

சுவாமி பாபா பற்றிய BBC நிகழ்ச்சிக்கு விமல் சொக்கநாதன் இனத்துவேசம் என்ற சாயத்தைப் பூசுவது மிகவும் வெட்கக்கேடானது. BBC கடந்த காலங்களில் கத்தோலிக்க மதஸ்தாபன மத குருமார்களின் ஓரினச் சேர்க்கைகள் பற்றி பல நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியது. இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து புதிய சட்டங்கள் உருவாகின. கத்தோலிக்க மதம் திருந்தி நடக்க சந்தர்ப்பம் ஏற்பட்டது. மேலும் Church of England மீதும் குற்றச்சாட்டுக்களையும் விமர்சனங்களையும் BBC முன்வைக்கின்றது.

ஒளிபரப்பு வரலாற்றில் மிகவும் சர்ச்சைக்குரிய டயானா விவகாரம், மைக்கல் ஜாக்சன் விவகாரம் ஆகியவற்றை BBCக்கு தொகுத்து வழங்கியவர் இந்திய வம்சாவழிப் பிரித்தானியரான மாட்டின் பாஷீர். பாஷீர் ஒரு இந்திய சொறிநாய், பொறுக்கிநாய் என்று விமர்சனம் செய்ததை யாராவது வாசித்துள்ளீர்களா? இது தான் எம்மவருக்கும் இந்நாட்டவருக்கும் இடையிலான முதிர்ச்சி, பக்குவம்.

பிரித்தானிய அரசு, ஈராக் மீது படையெடுப்பதற்கு ஆதாரமாக சமர்ப்பிக்கப்பட்ட புலனாய்வு அறிக்கை கவர்ச்சிகரமானதாக்கப்பட்டதை (Sexed Up Dossier) வெளியே கொண்டு வந்தவர் செய்தியாளர் அன்ருகிலிகன். டொக்டர் டேவிற் கெலியுடைய மரணம் ஒரு துன்பியல் நிகழ்வு. அதற்கு அன்ருகிலிகன் பொறுப்பாளி அல்ல. அவர் BBC விதிமுறைகளுக்கு அமைய செய்தி சேகரிக்கவில்லை. ஆனால் அவருடைய தகவல் சரியானது என்பது மீண்டும் மீண்டும் நிருபிக்கப்பட்டு உள்ளது. இருந்தும் விமல் சொக்கநாதன் கிலிகனையும் விட்டு வைக்கவில்லை.

யாராவது வேண்டுமானால் அரைச்சாமியாக இருக்கலாம். அல்லது முழுச்சாமியாராகவே இருந்து விட்டுப் போகலாம். அது சம்பந்தப்பட்டவர்களின் சொந்த நம்பிக்கை. தனிப்பட்ட நம்பிக்கை. அதற்காக சாயிபாபா என்ற மனிதப்பிறவி, எல்லா சட்டங்களுக்கும் அப்பாற்பட்டவர், எல்லா விமர்சனங்களுக்கும் அப்பாற்பட்டவர் எனக் கூறப்படுவது கற்கால அணுகுமுறை. சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள். நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே. இதைத் தான் இந்து சமயமும் சொல்கிறது. அதை சட்டத்தரணி விமல் சொக்கநாதன் முதல் அறிந்திருக்க வேண்டும்.



தமிழ்நாடு சேலத்தைச் சேர்ந்த ராகவேந்திரா என்ற 13 வயது சிறுவனை பாலசன்னியாசி, ஆன்மீகச் சிறுவன் என அழைக்கின்றனர் சிலர். கர்நாடக மாநிலத்தில் ராகவேந்திரா மடத்தில் வேதம் பயின்ற இச்சிறுவன், தான் நரசிம்மரின் அனுக்கிரகத்தால் பிறந்ததாகவும் பகவான் ராகவேந்தர் தனக்கு தீட்சை தந்ததாகவும் கூறுகிறான். இச்சிறுவனின் அடியார்கள் பட்டியலில் பெரும் தலைகள் எல்லாம் உள்ளதாம். பாபாவும் 14 வயதில் தன்னை அவதாரமாக அறிவித்தமை கவனிக்கத்தக்கது.

சுவாமி பாபாவை நியாயப்படுத்தும் வேகத்தில் சிறுவர்கள் மீதான பாலியல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய பாடகர் மைக்கல் ஜாக்ஷனையும் நியாயப்படுத்தி இருக்கிறார் கட்டுரையாளர் சொக்கநாதன். தான் வளர்ப்பதாக கூறும் கைக் குழந்தையை மாடியில் இருந்து தலைகீழாக உலுப்பிக் காட்டினார் ஜக்ஷன். சிறார்களுடன் படுத்து எழும்புவதை ஒத்துக் கொண்டும் உள்ளார். ஜக்ஷன் மீது சிறுவர்களை பாலியல் துஸ்பிரயோகம் செய்த சில வழக்குகள் பதிவு செய்யப்பட்டும் உள்ளது. இதனையெல்லாம் நியாயப்படுத்தும் விமல் சொக்கநாதன் எந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்று புரியவில்லை.

இந்த நாட்டிற்கு ஓடி வந்து இங்கு வசதியாக வாழ்ந்து பல ஆயிரக்கணக்கில் பணத்தை சேகரித்து, பல இலட்சக் கணக்கில் உடமைகளை சேகரித்து விட்டு சுதந்திரமாக இருந்து கொண்டு இந்த நாடு வழங்கி இருக்கும் ஊடகச் சுதந்திரத்தை கொச்சைப்படுத்துவது எப்படி நியாயமாகும். ஏதோ இவர்களையெல்லாம் பிரித்தானிய மகாராணி யாழ்ப்பாணம் போய் நேரடியாக லண்டனுக்குக் கூட்டி வந்த தோரணையில் வாழ்கிறார்கள் எம்மில் சிலர். எம்மை நன்றாக வாழவைக்கும் பலருக்கு உயிர்ப்பிச்சை கொடுத்து இருக்கும் நாட்டின் நல்ல பண்புகளை கற்றுக் கொள்வது ஒரு சிறப்பான பண்பாகும்.

சகிப்புத்தன்மை அற்றவர்களும் விளங்கிக்கொள்ள முயற்சிக்காதவர்களும் தான் ஜி நடேசன் போன்ற ஊடகவியலாளர்களைக் கொலை செய்தனர். துப்பாக்கி இருந்தால் சுடுவதும் இல்லாவிட்டால் நாயே, பேயே என்று திட்டுவதும் எமது கலாச்சாரமாகி விட்டதா? விமர்சனங்களை ஆரோக்கியமாகவும் பண்புடனும் வைக்க நாம் பழகிக் கொள்ள வேண்டும். விவாதங்களுக்கூடாக வளமான சூழலை கட்டி அமைக்க வேண்டும். ❑



# திரைப்படக் கூட்டுத் தாபனத்தில் முதன் முறையாகத் தமிழ் பிரிவு

சுதந்திர இலங்கையில் முதன் முறையாக தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு உள்ளது. ஜேவிபி அமைப்பின் உந்துதலால் உருவாக்கப்பட்ட தமிழ்ப் பிரிவின் இயக்குநராக சலனச் சித்திரம் அமைப்பின் ஸ்தாபகர் க தேவதாஸ் நியமிக்கப்பட்டு உள்ளார்.

தமிழ் மக்களிடையே நல்ல சினிமா, புகைப்படம், ஓவியம் போன்ற கலைகள் பற்றிய ரசனையை வளர்த்தல், புதிய தயாரிப்புக்களையும் ஆக்கங்களையும் ஊக்குவித்தல், கலைஞர்களை இனம் கண்டு, ஊக்குவித்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு சலனச் சித்திரம் என்ற அமைப்பு இலங்கையைத் தளமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இதன் ஸ்தாபகர் க தேவதாஸ். இவர் கடந்த ஆண்டு இலண்டன் வந்த போது தேசம் சஞ்சிகையுடன் இணைந்து தமிழ் சினிமா பற்றி விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு இருந்தார். அப்போது பிரித்தானியாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் திரைப்பட ஆர்வலர்களுடன் கூட்டாக செயற்படுவதற்கு சலனச் சித்திரம் முன்வந்திருந்தது.

அன்பும் நட்பும் மனிதாபிமானமும் கொண்ட எதிர்கால சமூகம் ஒன்று உருவாக வேண்டுமெனில் அச்சமூகம் பின்பற்றும் கலாச்சாரம் அன்பும் நட்பும் மனிதாபிமானமும் கொண்டதாக இருக்க வேண்டும். நல்ல கலாச்சாரத்தைக் கட்டி எழுப்புவதில் கலைகளினதும் கலைஞர்களினதும் பங்கு மிக முக்கியமானது. நல்ல கலைஞர்கள் வளர வேண்டுமெனில் நல்ல கலைகளை ஆதரித்து ரசிக்கும் பண்பு மக்களிடையே வளர வேண்டும். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே சலனச்சித்திரம் இயங்குகின்றது.

இலங்கையில் ஒவ்வொரு மாவட்டம் தோறும் இயங்கும் திரைக்கலைச் சங்கங்களின் ஒன்றியமாகவே சலனச் சித்திரம் இயங்குகின்றது. மாவட்டச் சங்கங்கள், தன்னாட்சியும் சுதந்திரமும் கொண்ட அமைப்புகள். பிரித்தானியாவில் தேசம் சஞ்சிகை சலனச் சித்திரம் அமைப்புடன் நட்புரீதியில் இயங்குகின்றது.

இவ்வாண்டு ஜனவரியில் 57வது தேசிய சினிமா ஆண்டு நிறைவையொட்டி தேசிய திரைப்படக் கூட்டுத் தாபனம் கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அதில் தமிழ் சினிமா வரலாறு எனும் தலைப்பில் சலனச் சித்திரம் ஒரு கண்காட்சியை அமைத்திருந்தது. 1983ல் ஏற்பட்ட தமிழ் பேசும் மக்கள் மீதான இன வன்முறை பற்றியும் தாக்கத்தை ஏற்படுத்தும் விதமாகவும் அக்கண்காட்சி அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.❑


S . SATHA & Co

SOLICITORS

*IMMIGRATION - CONVEYANCING - INJUNCTIONS*
*CRIMINAL - DIVORCE - LEGAL AID WORK*

Community Legal Service

Specialist Help Point
Immigration
Crime

Criminal Defence Service

ILPA

376 - 378 High Street North,
Manor Park, London E12 6PH

Tel : 020 8471 9484 Fax : 020 8471 9485

# சாமர்த்தியர்களின் சாமத்திய வீடு



ஆர் புதியவன்

புலம்பெயர் நாடுகளில் தமது தகுதியையும் மேதாவி மானத்தையும் நிர்ணயிக்கவும் நிலைநாட்டவும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பயன்படுத்தும் ஆயுதம் அரங்கேற்றமும் கொண்டாட்டமும். கொண்டாட்டங்கள், அரங்கேற்றங்கள் ஒரு அடிப்படை தேவை கருதி, வாழ்வியலோடு ஒன்றிக்காது, சம்பந்தப்பட்டவரது சம்மதம் இல்லாது, பெற்றோரின் தம்பட்டம் அடித்தலுக்காய் நடக்கும் நிகழ்வுகளாகிவிட்டன. ஐயனாருக்கு நேந்துவிட்ட ஆட்டுக்கடா போல அரங்கேற்றத்துக்கு நேந்துவிட்ட பிள்ளைகள் அல்லது மாதவிடாய்க்கு நேந்துவிட்ட பெண் பிள்ளைகள் புலம்பெயர்ந்தவர்களின் வாரிசுகள்.

வயலின் ஒலி வயிற்றைப் புரட்ட வகுப்புக்குச் செல்லும் சிறார்கள், கண்ணா வருவானா என்று காலைத் தொட்டு வணங்க மறுக்கும் மறுக்க முடியாத சிறார்கள் இருந்தாலும் அரங்கேற்றங்கள் மேடையேறுகின்றன. காரணம் நேந்துவிட்ட பெற்றோர் நேத்திக்கடன் முடிக்காமல் விடுவது என்ன நியாயம்?

விலாசத்திற்காக நிகழ்வு வைப்பவர்களுக்கு கிடைத்திருக்கும் இன்னொரு வரப்பிரசாதம் பூப்புனித நீராட்டு விழா. இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவெனில் முற்போக்குக் கருத்துக்களை அள்ளிவீசி ஊருக்கு உபதேசம் செய்தவர்கள் சிலர் கொண்டாட மிகுதிப்பேர் பால் வார்த்து சடங்கு செய்வது தான்.

அண்மையில் நடந்த ஒரு சாமத்திய வீடு. முற்போக்கு நாடகங்களைத் தெரிவு செய்து மேடையேற்றும் ஒரு உன்னத கலைஞன் சாமத்திய வீடு கொண்டாட அந்த கலைஞனின் இயக்கத்தில் தோன்றி நடித்த முற்போக்கு நடிகர்கள் முன்னின்று நடத்தினார்கள் நிகழ்வை அல்லது சாமத்திய வீடு என்ற நாடகத்தை.

ஒரு பெண்ணின் உடலில் ஏற்படும் இயற்கை மாற்றத்தை தோற்றத்தை வளர்ச்சியைக் கொச்சைப்படுத்தும் இந்த விலாசம் விரும்பும் அப்பாக்களும் அம்மாக்களும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சப்பறத்திற்கு சோடித்த மாதிரி சோடித்துக் கொண்டு செல்பவர்களும் ஏன் ஒரு கண்காட்சியை ஒழுங்கு செய்யக் கூடாது. அது இன்னும் பொருத்தமாக இருக்கும்.

மேற்படி கலைஞன் அல்லது கலைஞி கூறிய காரணம்? பிள்ளை ஆசைப்பட்டுக் கேட்டுவிட்டாள் என்பதாகும். நல்லது பிள்ளைகளின் தெரிவை ஏற்கும் பக்குவம் எம் பெற்றோர்கள் மத்தியில் வளர்ந்திருப்பது பாராட்டத்தக்கது. ஆனால் சாமத்தியச் சடங்குக்கு சொன்ன காரணம் சரியா?

ஒரு பிள்ளை சுயமாகச் சிந்தித்து முடிவு செய்ய முடியாத வயதில் கனவுலகில் மிதக்கின்ற பருவத்தில் காண்கின்ற எல்லாவற்றையும் கேட்பார்கள். எமது வசதிக்கு ஏற்பவும் பிள்ளையின் நன்மை தீமை கருதியும் சிலவற்றைத் தவிர்த்து தரம் பிரித்து வகுத்து நாம் அவர்களுக்கு கொடுப்பதில்லையா? ஒரு பேச்சுக்கு வைத்துக் கொள்வோம். இணையத் தளத்தில் நிர்வாண பாலியல் கதைகளைப் படிக்க விருப்பமாக இருக்கிறது என்று ஒரு பிள்ளை கேட்டால் அதற்கு ஒரு விழா எடுத்து ஒரு கணனியை வாங்கிக் கொடுப்பீர்களா? இல்லை என்றால் மாதவிடாய் வந்ததற்கேன் விழா? ஒவ்வொரு மாதமும் வரும் போதும் இவர்கள் விழா எடுப்பார்களா? பிள்ளைகளுக்கு மாதவிடாய் நாற்பது வயதிலா வருகிறது சரி பிழை அறிந்து விழா எடுங்கள் என்று கேட்க.

தங்களின் ஆசைகளை எதிர்பார்ப்புகளை வேஷத்தை நிஜத்தை மறைக்க இவர்கள் தேடும் போடும் போர்வை தான் மகள் ஆசைப்பட்டு விட்டாள் என்பது.

உங்கள் பிள்ளைக்கு மாதவிடாய் வந்தால் ஒரு நல்ல வைத்தியரிடம் அழைத்துச் செல்லுங்கள். ஆலோசனை பெறுங்கள். அதைவிட்டுவிட்டு தயவு செய்து பக்கத்து வீட்டுக்காரனின் கதவைத் தட்டிச் சொல்லாதீர்கள்.

சாமத்திய விட்டுக்குச் சென்று வாழ்த்திவிட்டு வந்த முற்போக்காளர்களான நண்பர்களுக்கு உங்கள் நடைமுறை பிழைக்கின்ற போது வானொலியிலும் தொலைக்காட்சியிலும் இனி அட்வைஸ் பண்ணுகிற வேலையை விட்டுவிடுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு ஞானஸ்தானம் பண்ணிவிட்டு முதல் மாதவிடாய் வரும் வரை காத்திருங்கள். ❑

**இரண்டு பட்டால் உண்டு வாழ்வு, இல்லையேல் ஒதுக்கப்படுவது திண்ணம். - புதுக் குறள்**

இந்துக் கல்லூரிகளின் முன்மாதிரி ஊரில் உள்ள பாடசாலைகளுக்கு உதவி செய்கிறோம் என தடல்புடலாக ஆரம்பமாகிய பழைய மாணவர் சங்கங்கள் எல்லாம் தமக்குள் அடிபடுவதில் மிகவும் பிசி ஆகியுள்ளனர். யாழ் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பிளவைத் தொடர்ந்து இப்போது சாவகச்சேரி இந்துக் கல்லூரியும் இரண்டாகப் பிரிந்து செயற்பட இருப்பதாக அறியப்படுகிறது. சில மாதங்களுக்கு முன் கல்லூரி ஆரம்பமான நூறாவது வருடத்தை பிறன்ற் ரவுன் ஹோலில் சிறப்பாகக் கொண்டாடிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஒரு சில உறுப்பினர்கள் ஏனைய சிலரால் திட்டமிட்டு ஒதுக்கப்படுவதால் தற்போது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இரண்டு படப்போகிறது. ❑

## பிறைவேட் செக்கியூரிட்டி :

தன்மானத் தமிழினம் தலை நிமிர்ந்து வாழ அது தன்னைத் தான் ஆழ வேண்டும் என அண்ணன் அமீர் அதை ஒரு கதைக்குச் சொல்ல, அதை வலு சீரியசாக எங்கட பொடியல் எடுத்து சிங்கள பொலிசுடன் அடிபட நாங்கள் எல்லாம் சீமைக்குக் கிளம்பி வந்தது எல்லாம் பழைய சோகக் கதை.

இப்படி தன்னைத் தான் ஆழ நினைத்த லண்டன் வாழ் டமிள்ஸ் இப்போது எடுத்ததற்கெல்லாம் பிறைவேட் செக்கியூரிட்டி கம்பனிக்குப் போய் அங்கு கறுப்பின இளைஞர்களைக் கொண்டு வந்து விழா நடாத்துவது பஷனாகப் போய்விட்டது. பெரிய அளவில் நடைபெறும் தென்னிந்தியக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சி, கானக்குயில் போன்ற நிகழ்ச்சிகளில் இவ்வாறான செக்கியூரிட்டியைப் போடுவது சகஜமாக இருந்தது. இப்போது என்ன வென்டால் 250 பேர் கலந்து கொள்ளும் நாடக விழாவுக்கும் கறுப்பின பாதுகாப்பு தேவைப்படுகின்றது. போற போக்கைப் பார்த்தால் இனி சாமத்திய வீடு, காது குத்து போன்ற விழாக்களுக்கும் இந்த செக்கியூரிட்டி அவசியம் போலத் தெரிகின்றது. ❑

## கூடி இருந்தால் கோடி பிரச்சினை :

சைவக் கோயில்கள் ஒருங்கமைப்பு இந்நாட்டில் மிகவும் அவசியம். ஆனாலும் அது அனைத்து ஆலயங்களையும் உள்வாங்கவில்லை. 4 கோயில் மட்டும் சேர்ந்து ஆலயங்களின் ஒன்றியம் என்ற தலைப்பில் செய்வது பொருத்தமாக இல்லை. இந்த ஆலய அமைப்பில் ஏனைய ஆலயங்கள் இணைய ஏன் பின் நிற்கின்றன? இந்த ஆலய அமைப்பு ஓரிரு ஆலயத்தின் கூட்டான அமைப்பா? அல்லது ஓரிரு தனிப்பட்டவர்களின் பலப்பரீட்சைக்கு தளமா? ❑

## வீட்டுக் கொடு - நான் உரும்பிராய் :

உயரத்தில் உள்ள முருகன் ஆலயத்தின் நிரந்தர நிர்வாக உறுப்பினருக்கான தேர்தல்.ஆலய அரசியல் சூடு பிடிக்க ஆரம்பித்துவிட்டது. அவன் கள்ளன் என இவரும் இவன் கள்ளன் என அவரும் வசைமாரி பொழிகின்றனர். தேர்தலால் இந்து மதம் வளர்கின்றதோ இல்லையோ தொலைபேசியில் வாக்கு வேட்டை நடத்துவதால் BT நிச்சயமாக வளர்கின்றது. இந்தப் பாழாய்ப்போன ஒரு பதவிக்கு 4 பேர் வரை போட்டி. இதில் இருவர் உரும்பிராய். ஊரின் நன்மை கருதி இவ்விருவரில் ஒருவர் தான் தேர்தலில் நிற்கப்போவதாக கேள்வி. ஊர் வோட் பிரிந்துபோகக் கூடாது கண்டியளோ. றொனி பிளேயர் கூட இவ்வளவு நுணுக்கமாக சிந்திக்கமாட்டார். இந்து மதத்தின் மீது இந்தப் பட்டு வேட்டி அடியார்களுக்கு எவ்வளவு அக்கறை பாருங்கள். இவர்களால் மேன்மை கொள்ளும் சைவநீதி? ❑

# எம் கே ஸ்ரீ அன்கோ மாட்டிக் கொண்டது

யூன் 16ல் The Guardian பத்திரிகை நிருபர்கள் Jamie Wilson and Alan Travis ஆகியோர் அரச சட்ட உதவிளைக் கறந்தவர்களை அம்பலப்படுத்தி உள்ளனர். பணத்தைக் கறந்த மிக மோசமான 10 நிறுவனங்களில் எம் கே ஸ்ரீ அன்கோ நிறுவனமும் இடம்பெற்று உள்ளது. இவர்கள் £447,000 பவுண்களை அரசிடம் இருந்து மேலதிகமாகக் கறந்து உள்ளனர். இத்தொகையை மீளப்பெற்றதுடன் இதனால் இவர்களுடனான ஒப்பந்தத்தை சட்ட சேவைகள் ஆணைக்குழு முறித்துக் கொண்டுள்ளது.

அரசாங்கம் தஞ்சம் கோருவோருக்கு வழங்கும் சட்ட உதவியை 120 சட்ட நிறுவனங்கள் துஸ்பிரயோகம் செய்து மேலதிகமாக பணத்தைக் கறந்து உள்ளனர். இந்நிறுவனங்கள் மீது விசாரணைகளை மேற்கொண்ட சட்ட சேவைகள் ஆணைக்குழு 8 மில்லியன் பவுண்களை அந்நிறுவனங்களிடம் இருந்து மீளவும் பெற்று உள்ளது.

தஞ்சம் கோருவோருக்கு வழங்கும் உதவியைத் துஸ்பிரயோகம் செய்யும் இந்நிறுவனங்கள் தஞ்சம் கோருவோருக்கு மோசமான சேவைகளையே வழங்குவதாகவும், இவர்களது ஆலோசனைகள் தரமற்றவையாக இருப்பதாகவும் இதனால் இவர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் தஞ்ச விண்ணப்பதாரிகள் ஆபத்தான சூழ்நிலைக்குத் தள்ளப்படுவதாகவும் தெரியவருகிறது. இதனாலேயே சட்ட சேவைகள் ஆணைக்குழு எம் கே ஸ்ரீ அன்கோ நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டுள்ளது. ஏனைய தமிழ் நிறுவனங்கள் பல எச்சரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக நடத்துனர் கணபதிப்பிள்ளை ஸ்ரீதரன் உடன் யூன் 15ல் நிருபர்கள் தொடர்பு கொண்ட போது குறிப்பிட்ட தொகையுடன் அவர் முரண்பட்டார். தங்கள் நிறுவனம் நடத்தப்பட்ட முறையால் சட்ட உதவி ஒப்பந்தத்தில் இருந்து தாங்கள் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டதாகத் தெரிவித்து உள்ளார். அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் இது வேறும் பல சட்ட நிறுவனங்களுக்கும் ஏற்பட்டு உள்ளதாக தெரிவித்திருந்தார்.

தஞ்சம்கோரிய தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல சட்ட நிறுவனங்கள் பொறுப்பற்ற தன்மையுடன் நடந்துவருவதாக குற்றம்சாட்டப்பட்டு உள்ளது. உள்துறை அமைச்சு விவகாரங்களுக்கு சட்ட அலுவலர்கள் குறித்த நேரத்துக்கு வருவதில்லை, மேன்முறையீடுகளை குறித்த நேரத்தில் செய்வதில்லை, வழக்குகளை சரிவரத் தயார் செய்வதில்லை போன்ற குற்றச்சாட்டுகள் முக்கியமானவையாகும். சில சட்டத்தரணிகள் விண்ணப்பதாரியின் வாக்கு மூலத்தை தமிழிலேயே அனுப்பியும் உள்ளனர். இவ்வளவு மோசமான சேவையை வழங்கிவிட்டு இந்த விண்ணப்பதாரிகளின் பெயரால் பணத்தையும் கறக்கின்றனர். மட்டை போடும் பையன்களிலும் பார்க்க இந்த கோட் ரை அணிந்த கனவான்கள் செய்வது துஸ்பிரயோகம், மோசடி, நம்பிக்கைத் துரோகம். ❑

வாழும் போது கௌரவிப்போம் - வரதர்

# மறுமலர்ச்சிக் காலம்

என் செல்வராஜா
நூலகவியலாளர்



கட்டுரையாளர் செல்வராஜா வரதரை இங்கிலாந்தில் நியூபறிபார்க் இல்லத்தில் வைத்து சந்தித்த போது.

தமிழில் புதுக்கவிதை இன்று ஓர் வளர்ச்சி கண்ட இலக்கிய வடிவம். தமிழில் முதன்முதல் புதுக்கவிதை எழுதியவர் மகாகவி பாரதி. வசனகவிதை என அவர் இதனைக் குறிப்பிட்டார். பார்க்கும் போது வசனத்தின் சாயலையும் படிக்கும் போது கவிதையின் துடிப்பையும் மிடுக்கையும் கொண்ட இலக்கிய வடிவம் இது என்கிறார் எழுத்தாளர் சிற்பி. ஈழத்தில் பாரதியைப் பின்பற்றி 1940களிலேயே புதுக்கவிதை புனைந்தவர்களில் முக்கியமானவர் வரதர். ஈழகேசரியில் 1943ல் இவர் எழுதிய ஓர் இரவினிலே என்ற கவிதையே ஈழத்தின் முதலாவது நவீன புதுக்கவிதை. இவரது கவிதைகள் யாப்பு, சீர, தளை என்ற கட்டுமானங்களுக்குள் அகப்படாமல் உள்ளத்து உணர்வை கலாபூர்வமாகத் தருகின்றன.

1955இல் முதன்முதலில் கவிதைக்கென்று ஒரு மாத இதழை மகாகவியை ஆசிரியராகக் கொண்டு தேன்மொழி என்ற பெயரில் வெளியிட்டுப் புதுமை செய்தவர் இவர். மேலும் மறுமலர்ச்சி, ஆனந்தன், வெள்ளி, புதினம், மாணவர்களுக்கான இதழான அறிவுக் களஞ்சியம், போன்ற பல சஞ்சிகைகளை 1946 முதலாக காலத்துக்கு காலம் வெளியிட்டிருந்தார்.

வரதரின் பலகுறிப்பு என்ற பெயரில் முதன்முதலில் தமிழ் டிரெக்டரியை 1970களில் வெளியிட்டார். பேர்குசன் டிரெக்டரி (Ferguson's Directory) என்ற பெரியதொரு உசாத்துணை நூலை ஒத்த இத்தகவல் திரட்டு வரதரின் முக்கிய வெளியீடாகும். இன்று போல் அன்றும் எவ்வித ஆதரவையும், நிதி உதவியையும் வழங்க எவரும் முன்வராததால், இந்த முயற்சி நின்றுபோனது.

எமது நாட்டில் பக்தி இலக்கியத்திற்கென ஒரு சஞ்சிகையை ஆரம்பித்து நடத்திய முன்னோடி என்ற பெருமையும் வரதருக்குரியது.

1943இல் தமிழிலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம் உருவாகுவதற்குக் கால்கோள் அமைத்து அதன்மூலம் 1946இல் மறுமலர்ச்சி சஞ்சிகையை வெளிக்கொணர்ந்து, ஈழத்து இதழியல் வரலாற்றில் முத்திரை பதித்தவர் வரதர் என்றால் அது மிகையல்ல. ஈழகேசரி மாணவர் மலரில் அக்காலத்தில் எழுதிக்கொண்டிருந்த வரதர், அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி, நாவற்குழியூர் நடராசன், மகாகவி உருத்திரமூர்த்தி, பஞ்சாட்சரசர்மா, கனகசெந்திநாதன், முதலியோர் மறுமலர்ச்சி இலக்கியச் சங்கத்தை அமைத்து 3 ஆண்டுகள் மறுமலர்ச்சி சஞ்சிகையை வெளியிட்டார்கள்.

மரபுப்பாதையில் தடம் பதித்து நடந்துகொண்டிருந்த ஈழத்து இலக்கியப் போக்கையே திசை திருப்பிவிட்ட சாதனையைச் செய்தவர்கள் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள். இக்காலகட்டத்தில் ஈழத்துப் புதிய சிறுகதை இலக்கிய முயற்சிகளுக்குக் களமாக மறுமலர்ச்சி சஞ்சிகை அமைந்தது. அதன் கருத்துக்களத்தில் புதுமையும் பழமையும் முட்டி மோதின. கலையும் இலக்கியமும் வெறும் கலைப்பண்டங்களல்ல. சமூகப் பயன்பாடுடையன வாகவும் அமைய வேண்டும் என்ற கருத்து மறுமலர்ச்சிக் காலத்தில் தான் வேரூன்றியது.

1960-70களில் இவரது வரதர் வெளியீடு முக்கிய பல நூல்களை வெளியிட்டது. சுமார் 35 அரிய நூல்களை இப்படியாக வெளிக்கொணர்ந்தவர் வரதர்.

வரதரின் நீண்டகால இலக்கியப்பணியைப் பாராட்டி இலங்கை அரசு இலக்கியத்துறைக்கு வழங்கும் அதிஉயர் விருதான சாகித்திய இரத்தினம் என்னும் விருதினை இவருக்கு வழங்கிக் கௌரவித்திருந்தது. தமிழுக்கான இலங்கையின் முதலாவது சாகித்திய ரத்னா விருது இவருக்குக் கிடைத்தது.

வரதரின் 75வது அகவை நிறைவு - பவளவிழா 1999 ஜுலையில் தாயகத்தில் நடைபெற்றது. பவளவிழா நினைவுச்சான்றாக ஈழத்துச் சிறுகதை வரலாறு என்ற இலக்கிய வரலாற்று நூலொன்றை செங்கை ஆழியான் (க.குணராசா) எழுதி வரதர் வெளியீடாக வெளியிட்டார். சுமார் 400 சிறுகதைப் படைப்பாளிகளையும், 274 சிறுகதைத் தொகுதிகளையும் பத்திரிகைகள், சஞ்சிகைக ளில் வெளிவந்த சுமார் எண்ணாயிரம் வரையிலுமான சிறுகதைகளையும் ஆய்வுசெய்து இந்த அரிய ஈழத்து சிறுகதை வரலாற்று நூல் எழுதப்பட்டிருந்தது.

வரதரை கௌரவிக்கும் நோக்கில் வரதர் எண்பது என்ற வரதர் பற்றிய தொகுப்பு நூல் ஒன்றை ஞானம் பதிப்பகம் தனது 10வது வெளியீடாக வெளியிட்டது. மேலும் செங்கை ஆழியான், மறுமலர்ச்சி சஞ்சிகையின் 24 இதழ்களில் வெளிவந்த 25 சிறந்த கதைகளைத் தேர்ந்தெடுத்து மறுமலர்ச்சிக் கதைகள் என்ற தொகுப்பாக வெளியிட்டார்.

வரதரின் இலக்கியப் பயணம் மிகவும் நீண்டது. கல்யாணியின் காதல் என்ற வரதரின் முதலாவது சிறுகதை 1940இல் ஈழகேசரி ஆண்டுமலரில் வெளிவந்தது. அதன்பின்னர் தொடர்ந்து ஈழகேசரி, மறுமலர்ச்சி, சுதந்திரன், ஆனந்தன், தினகரன், வரதர் புத்தாண்டுமலர், கலைச்செல்வி, தமிழ் எழுத்தாளர் சங்கக் கதையரங்கு, மத்தியதீபம், புதினம், மல்லிகை ஆகிய இதழ்களில் 1976 வரை 29 சிறுகதைகளை எழுதியுள்ளார்.

வரதரின் முக்கிய சிறுகதைகள் ஈழத்தின் தமிழர் நிலைப்பட்ட அனுபவங்களை மிகுந்த உணர்திறனுடன் பதிவுசெய்துள்ள படைப்புகளுக்குள் இடம்பெறுவனவாகும். சிறுகதைகள் தவிர இவர் மூன்று குறுநாவல்களையும், பல கவிதைகளையும் ஈழத்துப் படைப்பிலக்கிய உலகில் பிரசவித்துள்ளார்.

தியாகர் சண்முகம் வரதராசன் என்ற தி.ச. வரதராசன் 1924இல் யாழ்ப்பாணத்தில் பொன்னாலைக் கிராமத்தில் பிறந்தவர். தனது பதினைந்தாவது வயதிலேயே – 1939இல் ஈழகேசரி இதழின் மாணவர்களுக்கான கல்வி அனுபந்தத்தில் ஒரு கட்டுரையை எழுதியதன் மூலம் ஈழத்துத் தமிழ் இலக்கியத்துடன் தன்னைப் பிணைத்துக் கொண்டவர்.

இன்று ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிரந்தரமாக தன்னை பதித்துக் கொண்டவர் வரதர். இவரை கௌரவிப்பதில் நாமும் பெருமை அடைகிறோம்.❑


## சமூக அக்கறையாளர்களுக்கு :

*இலங்கை தமிழ் பேசும் மக்களின் போராட்ட வரலாற்றில், தனி நபர்களின் வரலாற்றுப் பாத்திரத்தையும் பங்களிப்பையும் ஈடுபடுதலையும் பதிவு செய்ய விரும்புகிறோம். இவற்றுக் கூடாக ஈழப் போராட்டம் தொடர்பாக கட்டமைக்கப்படும் புனைவுகளில் இருந்து நேர்மையான, நம்பகத்தன்மை கொண்ட ஆவணப்படுத்தல் ஒன்றின் தொடக்க நிலை முயற்சியே இது. இத்தொடக்க நிலை ஆவணப்படுத்தலின் ஆரம்பம், ஈழப் போராட்டம் பற்றி முழுமையான போராட்ட வரலாற்றை நோக்கிய நகர்வுக்கு, முன்னோடியாக அமையும் என்று நம்புகிறோம். எனவே இப்போராட்ட வரலாற்றில் ஏதோ ஒரு வகையில் தங்களை இணைத்துக் கொண்ட அனைவரினதும் ஒத்துழைப்பை நாடுகிறோம். உங்களின் உதவி புனைவுகளில் இருந்து எம் வரலாற்றை மீட்கத் துணை செய்யும்.*

சமூக அசைவிற்கான எழுத்தியக்கம்.

தொடர்புகளுக்கு :

அசை - Assaie
2 Allee Louise Zueiss
93140 Bondy
France

Tel : 00331 4263 3176
e-Mail : assaie@hotmail.com



## JR Universal Exchange

**10 Queensway,
London W2 3RX**
(Opposite of Queensway Station, Central Line)

Don't lose your earnings in paying commission by exchanging. We never charge commission. Our rate makes the different. Better deal for large amounts. Visit us today and you will realise how much you could save with our exchange rates.

**தரகு கொடுப்பதனால் உங்கள் வருமானத்தை இழக்கத் தேவையில்லை.
ஏனெனில் நாம் தரகு எதுவும் பெற்றுக் கொள்வதில்லை.
உங்கள் நாணயங்களுக்கான உரிய பெறுமானத்தை வழங்குவதில் எமது அணுகுமுறை வேறானது.**

**எந்த அளவு பணமும் கைமாற்றப்படலாம்.
ஒரு முறை விஜயம் செய்து எமது அணுகுமுறையை தேர்ந்து கொள்ளுங்கள்**

We open 7 days a week,
from 8:30 a.m - 10:00 p.m

Tel : 020 7243 1884
Mobile : 07956 305 870 (Ravi)

**JR Universal Exchange**
Foreign Exchange & Cheque Cashing

# அமைதி குலைந்த நாட்கள்



அமைதி குலைந்த நாட்கள் புதுசு சஞ்சிகையின் கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா யூலை 4ல் சட்டத் தரணி சிறிகாந்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. 1980களில் அரசியல் எதிர்ப்பிலக்கியமாக வெளிவந்த புதுசு சஞ்சிகையில் அ இரவி, இளவாலை விஜயேந்திரன், பா பாலசூரியன் (படம்: இடது), நா சபேசன் (வலது) முக்கிய பங்கெடுத்தனர். ஊர்வசி, ஔவை போன்ற பெண் கவிஞர்களது பங்களிப்பும் குறிப்பிடத்தக்கது.

தாம் விரும்பிய ஜனநாயகப் பண்புக்கு அமைய போராட்டம் தொடரவில்லை. ஆதலால் புலம்பெயர்ந்து வெவ்வேறு துறைகளுக்குச் சென்றதாக சபேசன் வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

எல்லோராலும் ஆயுதம் ஏந்திப் போராட முடியாது என்று குறிப்பிட்ட பத்மநாபஐயர் அவரவர் தத்தமது துறைகளில் போராட்டத்துக்கு உதவ வேண்டும் என்றார். போராட்டத்துக்குப் பிற்பாடு செய்வோம் என்றிருந்தால் நாம் பின்தங்கி விடுவோம் என்று குறிப்பிட்ட அவர் இவை எல்லாம் போராட்டத்துடன் சமாந்தரமாக செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

ஐயர் தனதுரையில் இக்கவிதைத் தொகுப்பின் படைப் பாளிகளில் ஒருவரான அ இரவி கருத்து வேறுபாடுகளால் விழாவில் கலந்துகொள்ளாததை சுட்டிக்காட்டினார்.

கால்நூற்றாண்டுக்குப் பின் வெளிவந்தாலும் அதன் வரலாற்றுப் பாத்திரம் முக்கியமானது என்று தனது ஆய்வுரையை ஆரம்பித்த கலாநிதி மு நித்தியானந்தன் இத்தொகுப்பு வெளிவருவதை விரும்பாதவர்கள் ஜனநாயகத்தை விரும்பாதவர்கள் என்றும் மாறுபட்ட கருத்துக்களையும் வரவேற்பது தான் கருத்துலக நாகரீகம் என்றும் குறிப்பிட்டார்.

புதுசு சஞ்சிகை பற்றிக் குறிப்பிடுகையில் பதுளையில் எஸ் எஸ் எல் சி மட்டத்தில் உருவான ஒரு சஞ்சிகையில் 8 இதழ்கள் வெளிவந்து நின்று போனதை நித்தியானந்தன் நினைவுபடுத்திக் கொண்டார். பிள்ளையான் நம்பி என்ற மட்டக்களப்புப் போராளியின் வரலாற்றையும் மீட்டுக் கொண்டார். ஆயுதங்கள் மட்டுமே வாழ்ந்த காலகட்டத்தில் மனிதநேயமாவது மண்ணாவது என்று அக்காலகட்டத்தின் கொடுமையை நித்தியானந்தன் வெளிப்படுத்தினார். இராப்போசனத்துடன் விழா இனிதே முடிவுற்றது. ❑

**Low Cost Accomodations in London**

# LANGORF HOTEL & APARTMENTS

20 Frognal, Hampstead, London, NW3 6AG

**Flats**
**Studios**
**Rooms**
**Hostels**

**Accomodation available form 1 day to 1 year**

**Accomodation for families or singles**

**We have various accomodation to fit your budget.**

**No DSS**

Tel : 079 1944 4994
Fax : 020 7281 6904

Email : tarrin@desilugroup.com
Web : www.desilugroup.com

Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of companies
Mercers Rd, London N19 9PU.

# சொல்ல இயலாத கதை





மலர்விழி

என்னுடைய விரல்கள் முடிந்தவரை மிக வேகமாகக் கம்பியுட்டர் கீபோர்ட்டில் உள்ள எழுத்துக்களைத் தட்டிக்கொண்டிருந்தன. வக்கீல் வேதாசலம் சொல்லச் சொல்ல மிக வெகமாக டைப் செய்தேன். திங்கள் காலை கோர்ட்டுக்கு வரப்போகின்ற கேஸ் இது...

ஒரு வழியாக வேலையை முடித்துக்கொண்டு, கம்பியுட்டரை மூடி என் கைப்பையை எடுத்துக்கொண்டு மாடியிலிருந்து கீழே இறங்கினேன்.

எனக்கு முன்னரே கீழிறங்கிய வேதாசலம் சார் கீழே மூடியிருந்த கதவை இழுத்து இழுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். என் காலடிச் சத்தம் கேட்டதும் நிமிர்ந்து என்னைப் பார்த்து "ரமேஷ் பூட்டிவிட்டுச் சென்றுவிட்டான்" என்றார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

சனிக் கிழமைகளில் எங்கள் அலுவலகம் பாதிநாள் தான் பணிசெய்யும். அன்று எல்லோரும் இரண்டு மணிக்கே சென்றுவிடுவார்கள். இரண்டாம் மாடியில் நாங்கள் இருவர் மட்டும் அந்த அறையில் பணிசெய்து கொண்டு இருக்க, நாங்கள் மேலே இருப்பது தெரியாமல், எங்களை உள்ளே வைத்துப் பூட்டிவிட்டுச் சென்றுவிட்டான் இந்த ரமேஷ்.

மணி ஐந்தரை ஆகிவிட்டது.

"என்ன செய்ய? கடவுளே இது என்ன சோதனை?"

நான் விரைந்து சென்று என்னால் முடிந்தவரை கதவை இழுத்துப் பார்ததேன். ...ஹூம் முடியவில்லை. தொலைபேசியை எடுத்து ரமேஷின் எண்களை அழுத்தினேன்.

"நான் தற்சமயம் பேச இயலாததால் உங்கள் எண்ணை பதிவுசெய்யுங்கள்..." என்ற ரமேஷின் குரல் எனக்கு மிகவும் எரிச்சலூட்டியது.

என் கைப்பையைத் திறந்து அந்தச் சிறிய தொலைபேசி டைரியைத் திறந்து என் தோழி குமுதினிக்கு போன் செய்தேன். என் துர்அதிர்ஷ்டம் அவளும் இல்லை.

அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்தேன். திடீரென அழைத்த தொலைபேசியை எடுத்தபோது, குமுதினியின் கணவர் குரல். கடவுளுக்கு நன்றி கூறி மிக விரைவாக எங்கள் நிலைமையை அவரிடம் விளக்கினேன்.

"ஓகே.. ஓகே.. நீங்கள் பதட்டப்படாதீர்கள். நான் உடனடியாக மனேஜரை தொடர்புகொண்டு அவரை அலுவலகத்தின் மாற்றுச்சாவியை எடுத்துக்கொண்டு உடனே வரச்சொல்கிறேன்..."

எனக்கு போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

தொலைபேசி உரையாடலை அவதானித்துக் கொண்டிருந்த வேதாசலம் சார் என்னை நோக்கி,

"என்ன ஆச்சு? ரமேஷ் வாரானா?" என்று வினவினார்.

"இல்லை.. மேனேஜர் வருகிறார்" என்று சுரத்தையின்றிப் பதிலளித்தேன்.

இனி மனேஜர் வந்து சேர எப்படியும் 40 அல்லது 45 நிமிடங்கள் ஆகும். அதுவரை இவருடைய அறுவையைக் கேட்டுத் தான் ஆகவேண்டும். என்ன செய்ய? விதி என்று நொந்துகொண்டு மீண்டும் இருக்கையில் போய் அமர்ந்தேன்.

"இந்த ரமேஷ் பையன் இப்படிச் செய்வானா? எல்லாம் வயசு தான் காரணம். அவன் கேர்ள் பிரண்டைக் காணவேண்டும் என்ற அவசரத்தில் நாங்கள் இருப்பதையே கவனிக்காமல் நம்மை உள்ளே வைத்துப் பூட்டிவிட்டுச் சென்றுவிட்டானே.

ஹூம் நான் கூட அவன் வயதில் இப்படித்தான் இருந்தேன்."

நானும் வக்கீல் வேதாசலம் பற்றிக் கேள்விப்பட்டதுண்டு. மிகக் கெட்டிக்காரரான அவர் சின்ன வயதில் பெண்கள் விஷயத்தில் மட்டும் கொஞ்சம் அப்படி இப்படி என்று...

இப்போது 62 வயதில், பணத்திற்காக இந்த அலுவலகத்தில் உழைத்துக் கொண்டிருக்கிறார்.

"என்னம்மா? என்ன யோசனை?" என்று என்னைக் கேட்டவர் என் மனதில் ஓடிய எண்ணங்களை படித்தவர் போலப் பேச ஆரம்பித்தார்.

"நானும் இந்த ரமேஷ் மாதிரித் தான். சின்ன

வயதில் இந்த நாட்டுக்கு வந்தேன். என் மனைவி, இரண்டு குழந்தைகள் எல்லோரையும் ஊரில் விட்டுவிட்டு இங்கு வந்தேன். அப்போது இங்கே ஒரு ஸ்டூடியோ அபார்ட்மென்ட்டில் தங்கிக்கொண்டு வேலை செய்துகொண்டிருந்தேன். கஷ்டப்பட்ட ஜீவனம். கிடைத்த பணத்தை ஊருக்கு அனுப்பி வைத்துவிட்டு முடிந்தவரை சமாளித்துக் கொண்டு நாட்களைத் தள்ளிக்கொண்டிருந்தேன்."

அவர் கண்கள் பழைய நினைவுகளை பிரதிபலித்தன.. நினைவுகள் மீண்டும் அந்த நாட்களைத் தேடிச் சென்றன.

அன்று ஒருநாள் காலை வேளை. அவசர அவசரமாக அலுவலகத்துக்குக் கிளம்பிக்கொண்டிருந்தார் வேதாசலம். திடீரென அழைப்புமணிச் சத்தம் கேட்டு, கதவைத் திறந்து பார்த்த அவர் இன்ப அதிர்ச்சியில் உறைந்து நின்றார். எதிரே ஒரு தேவதை நின்று கொண்டிருந்தாள். தன்னையே மறந்தவராய் அவளையே பார்த்துக்கொண்டு நின்றார்.

"சார் பிளீஸ்.. உள்ளே வரலாமா?" அழகான ஆங்கிலத்தில் மெல்லிய குரல் கேட்டது. தன்னிச்சையாய் விலகி வழிவிட்டார்.

அவள் நேரே உள்ளே வந்து அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தாள். ஆனாலும் பேசத் தோன்றாமல், தன்னையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தவரை நோக்கி,

"எனக்கு ரொம்ப பசிக்கிறது.. சாப்பிட்டு இரண்டு நாளாயிற்று.. ஏதாவது சாப்பிடக் கிடைக்குமா?" என்று பரிதாபமாகக் கேட்டாள்.

தான் மட்டும் வீட்டில் என்பதால் பெரிதாய் சாப்பாடு என்று செய்வதில்லை. காலையில் ஒரு கப் டீ, இரண்டு துண்டு ரொட்டி. இல்லையென்றால் ஒரு கப் கான்பிளக்ஸ் சாப்பிட்டுவிட்டு கிளம்பிவிடுவார். மதியம் ஆபீஸ் அருகேயுள்ள கெபாப் கடையில் ஒரு பவுணுக்கு சிப்ஸ், பணம் கையிலிருந்தால் இரண்டு பவுணுக்கு ரொட்டி அல்லது சாப்பாடு, இரவு இரண்டு பெரிய வாழைப்பழம் என்று சமாளித்துக் கொண்டிருப்பவர்.

இவளுக்குச் சாப்பிட என்ன கொடுப்பது?

விறுவிறுவென ப்ரெட் எடுத்து அதை டோஸ்ட் செய்து கொஞ்சம் வெண்ணெயும் ஜாமும் தடவிக் கொண்டு வந்து கொடுத்தார்.

கண்களால் நன்றிகூறி வாங்கியவள், கடகடவென சாப்பிடத் தொடங்கினாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவருக்கு, அவள் மேல் ஒரு பரிதாபம் ஏற்பட்டிருந்தது.

தேவதை போல் அழகு. ரோஜாப்பூ கலர், கரும் திராட்சை விழிகள், ஆப்பிள் கன்னங்கள், என்று புத்தகங்களில் தான் படித்திருக்கிறார். இன்று இதோ... அவரின் கண் எதிரிலே...

மனம் "வேண்டாம்...பாவம் இவள்.. உன் மகளைவிட இரண்டு மூன்று வயது பெரியவளாய் இருப்பாள். வேறுவிதமாக நினைப்பது தவறு" என்று இடித்தது.

சாப்பிட்டு முடித்து கிளாஸில் இருந்த பழரசத்தை அவள் குடிக்கும் போது, அவர் அவளுடைய சங்குக் கழுத்தில் தன் பார்வையைப் பதித்தார்.

அவருடைய அறிவுக்கும், உணர்ச்சிகளுக்கும் இடையே ஒரு பெரிய போராட்டமே நடந்துகொண்டிருந்தது. யாரிவள்?

பழரசத்தைக் குடித்து முடித்தபின் அழகாய் வாயைத் துடைத்து, க்ளாசை வைத்துவிட்டு இருக்கையிலிருந்து எழுந்துவந்து படுக்கையில் அமர்ந்திருந்தவரின் அருகில் அமர்ந்து அவரின் கைவிரல்களை எடுத்துத் தன் விரல்களில் அவள் நன்றியுடன் கோர்த்த போது அவருடைய உணர்ச்சிகள் அவருடைய அறிவை போராட்டத்தில் வென்றுவிட்டன.

அன்று தொடங்கிய அந்த உறவு கிட்டத்தட்ட பதினைந்து வருடங்கள் தொடர்ந்தது.

அவள் அவருடனேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டாள். குடிகாரத் தகப்பனுக்கும், வழியற்ற தாய்க்கும் பிறந்த ஏழாவது மகள் இவள். எப்போதும் சண்டையிடும் பெற்றோர்கள்.. பசியால் வாடும் உடன் பிறந்தவர்கள்.. இவர்கள் அவ்வப்போது எங்காவது சென்று திருடி மாட்டிக் கொள்வார்கள். சில நாட்கள் குடும்பத்தில் ஒன்று இரண்டுபேர் காணாமல் போய்விடுவார்கள். எல்லாவிதமான கெட்ட பழக்கமும் அந்தக் குடும்பத்தில் சகஜமாக இருந்தன.

இப்படிப்பட்ட சீரழிந்து போன ஒரு குடும்பத்தில் வளர்ந்தவளுக்கு, தன்னை ஒரு மகாராணிபோல நடத்திய வேதாசலத்தை மிகவும் பிடித்திருந்தது. பாதுகாப்பற்ற சூழ்நிலையே பழகிப்போன அவளுக்கு இவருடைய உறவு ஒரு பாதுகாப்பைத் தந்தது. அது இருவருக்கும் இடையே உள்ள இனம், வயது, அந்தஸ்து என்ற எல்லாவற்றையும் மறக்கச்செய்தது.

இந்தப் பதினைந்து ஆண்டுகளில் வேதாசலம் மிக வேகமாக வளர்ந்தார். பெரிய அளவில் வெற்றிகள் அவரைத் தேடிவந்தது. இந்த தேவதை கொண்டுவந்த வெற்றி என மிகநம்பினார். பணம் வந்து குவிந்தது.

குடும்பத்தை மறக்காமல் அவர்களுக்கு பணம் அனுப்பினார். குழந்தைகளை நன்கு படிக்க வைத்தார். அவர் குடும்பம் முழுவதும் லண்டன் வர பணத்தைத் தண்ணீர் போலச் செலவு செய்தார்.

ஒருவாறாக அவருடைய மனைவி மற்றும் குழந்தைகள் அனைவரும் லண்டன் மண்ணை

மிதித்தார்கள். கணவனைப் பற்றி வதந்திகளாகக் கேட்டவை உண்மையெனக் கண்முன் கண்ட அவருடைய மனைவி நொறுங்கிப் போனார். குழந்தைகளுக்காக, அவர்களுடைய தகப்பனாக அவரை ஏற்றுக்கொள்ள முடிந்த அவளால் துரோகம் செய்த கணவனாக அவரை ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

வளர்ந்துவிட்ட பிள்ளைகளும் அப்பாவின் செயலை ஏற்றுக் கொள்ள அறவே மறுத்தனர். வீடே போர்க்களமானது. குடும்பம் மொத்தமும் அவரை ஒரு எதிரியைப் போல் நடத்தியது.

இந்தச் சூழ்நிலை அவருக்கும், அவளுக்கும் இடையே இருந்த உறவை மேலும் வலுப்படுத்தியது.

கொதித்துப் போன அவருடைய மூத்தமகள், அவர் இல்லாத நேரம் வந்து அவளை அழித்துவிடப் போவதாக வேறு மிரட்டிவிட்டுச் சென்றாள். ஒருநாள் அபார்ட்மென்டுக்கு வேதாசலம் வந்தபோது, அவள் அங்கிருக்கவில்லை. அவருக்கு ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டு வெளியேறிவிட்டாள். அதன்பின் அவளைக் காணவே முடியவில்லை.

அவருடைய வாழ்வில் ஒரு வெறுமை வந்து அமர்ந்து கொண்டது.

அதன்பின் அவரது தொழிலிலும் சடசடவென ஒரு சரிவு. அவள் சென்று கிட்டத்தட்ட 12 வருடங்கள் ஓடிவிட்டன. குழந்தைகளுக்கு திருமணம் ஆகி அவர்களும் வாழ்க்கையில் செட்டிலாகி விட்டார்கள். மனைவி மூத்த மகளுடன் சென்று விட்டாள். இப்போது குடும்பம் மொத்தமும் அவரை ஒதுக்கி வைத்துவிட்டது.

இவர் மட்டும் அந்த அபார்ட்மென்டில் தனியே வசித்துக்கொண்டு இருக்கிறார். என்றாவது அவள் திரும்பி வந்து அழைப்பு மணியை மீண்டும் அழுத்துவாள் என்ற நம்பிக்கை இன்னமும் அழிந்துவிடவில்லை.

மனேஜர் வந்து கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. நானும் வேதாசலம் சாரும் கிளம்பினோம். என்னை அனுப்பிவைக்க பஸ் நிறுத்தம் வரை வந்தார்.

அதுவரை என் மனதில் அடக்கி வைத்திருந்த கேள்வி வெளியே வந்தது.

“சார், உங்கள் வாழ்வில் நடந்த இந்த நிகழ்வுக்காக வருத்தப்படுகிறீர்களா?”

“இல்லை.. நிச்சயமாக இல்லை... அவளுடன் நான் வாழ்ந்த அந்தப் பதினைந்து வருடங்கள் என் வாழ்வில் மறக்க முடியாதவை. நான் ஒரு மகாராஜா போல் வாழ்ந்த நாட்கள் அவை. என் வாழ்வில் நான் மிகச் சந்தோஷமாக இருந்த நாட்கள் அவை.”

அவர் அந்த வார்த்தைகளை ஆறுதலாக, உறுதியுடன் சொன்ன வேளை அவரது கண்களில் தெரிந்த அந்த ஒளி. அந்த ஒளிபட்டு ஜொலித்த அவருடைய முகம். அவர் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையெனச் சத்தியம் செய்தது.

“அப்படியென்றால்.. உங்கள் மனைவி, பிள்ளைகள் பாவம் இல்லையா?” கூரிய என் நாவிலிருந்து வெளிவந்தன அந்த வார்த்தைகள்.

“நான் ஒரு தந்தையாக அவர்களுக்கு வேண்டிய எல்லாம் செய்துவிட்டேன். என் குழந்தைகளுக்கு படிப்பு, வேலை, வீடு, சொத்து எல்லாம் தேடிக் கொடுத்தேன். என் மனைவிக்கு வேண்டிய அளவு பணம், எல்லாம் தேடிக் கொடுத்துவிட்டேன். என் கடமைகள் எதையும் குறைவில்லாமல் செய்துவிட்டேன். ஆனால் என் மனதின் காதல், அன்பு எல்லாம் அவளுக்குத் தான். அன்பு செய்வதை கடமையாகக் கொள்ள முடியாது.

**“You Can’t love someone as duty”** அன்பு, காதல் என்பது தானாக இயல்பாக, வரவேண்டும். அது அவளிடம் வந்தது....மிக இயல்பாய் வந்தது. இதெல்லாம் உங்களுக்குப் புரியுமோ இல்லையோ எனக்குத் தெரியவில்லை.. அதை அனுபவித்தவர்களுக்குத் தான் அது புரியும்.”

நான் ஏற வேண்டிய பஸ் வந்ததும், என்னை ஏற்றிவிட்டு அவர் விடைபெற்றுச் சென்றுவிட்டார்.

**“You Can’t love someone as duty”**

அன்பு செய்வதை கடமையாகச் செய்ய இயலாது. அது தானாக வரவேண்டும். அவருடைய அழுத்தமான வார்த்தைகள் எனக்குள் மீண்டும் மீண்டும் ஒலித்த வண்ணம் இருந்தன.

நம் நாட்டில் என்னதான் குடும்பங்களுக்குள் பிரச்சினைகள் வந்தாலும் சமுதாயம் என்ற சக்திக்குக் கட்டுப்பட்டு குடும்பம் என்ற அமைப்புச் சிதறாமல் இருந்தது. ஆனால் இங்கு..? இனிவரும் நாட்களில் குடும்பம்? என் வாழ்வு, என் சந்தோஷம், என்று ஒவ்வொருவரும் நினைக்க ஆரம்பித்தால்?


குடும்பம் என்ற அமைப்பு இல்லாமல் ஆகிவிட்டால் குழந்தைகளின் எதிர்காலம், பாதுகாப்பு, என்னாவது?

ஒருவேளை அவர் கூறியதுபோல் நாம் பண்பு, கலாச்சாரம் என்ற முகமூடிகளை அணிந்துகொண்டு நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்கிறோமோ? எனக்குள் ஆயிரம் கேள்விகள். எனக்குப் பதில் தெரியவிலலை.

நான் இறங்க வேண்டிய தரிப்பிடம் வந்துவிட்டது. எது சரி? எது தவறு? நீங்களும் கொஞ்சம் யோசியுங்களேன். பதில் தெரிந்தால் எனக்கும் சொல்லுங்கள் பிளீஸ்..

- முற்றும் -

மஜிதா



போகம்;
தெய்வம்,
போர்த்தி வைப்பு,
மாறுபாடுகள்;
அழகு சில நியதிகளின்
குறியீடு. தவிர்ப்புகள் தரித்த பூரிப்பு
அது இயற்கை

அழகை ரசிக்குமாப் போல்
ஆண்களின் கோரத்துக்குள்
சிக்கும் ஒரு இயந்திரமாகி
சில நேரம்
நாக்கிளிப் புழுப் போலவும்...
ஒரு
அருவருப்பாகவும்
குழந்தைகளை உற்பவிக்கும்
இயந்திரம் போலவும்...
வெறுப்பிலும் கலவி வேண்டும்,
ஆண்குறிகளினால் அழுத்தப்படும் போது
வலியோடும்...
உடைந்து அடங்கும் போது
இயலாதவளாகி


மாதம் மாதம்
மாதவிடாய் ஒரு அவஸ்தைதான்.

பெண்
கண்ணீர்
வலி
மனங்கள்...
என் யோனி... வெறுப்புடன்
போகம் மறுக்கும்
என்னாலும் முடியும்
உன்னை நிராகரிக்க...
எனக்கும்
ஒரு அருகதையிருக்கிறது.
ஏனெனில்
நான்
ஒரு
பெண்.


குறைந்த செலவில் நிறைந்த சேவையைப் பெற

MERVIN WINDOWS

Manufacturers & Installers
of Fine Quality, High Security,
Double Glazed uPVC Windows & Doors



6 Lea Park Trading Estate
Millicent Rd
Leyton, London E10 7LG

E-mail : lingam281@yahoo.co.uk
Tel : 020 8558 4467
Mob : 079 5011 8563

சிறுவர் தேசம்

# SIRUVAR THESAM

06

July 04 / Sep 04

எசெக்ஸ் தமிழ் பள்ளியின் கலைமாலையில் பல்வகை நிகழ்ச்சிகளை மாணவர்கள் வழங்கினர். இயல், இசை, நாடகம் என தங்கள் திறமைகளைக் காட்டி பெற்றோரையும், ஆசிரியர்களையும் மனங்குளிரச் செய்தனர். 5வது ஆண்டாக நடைபெறும் இவ்விழா யூன் 12ல் Barking Abbey Comprehensive School ல் நடைபெற்றது. படம் : விழாவில் பேசிய அருள்வாணி ரவிச்சந்திரன் (11)





பாரதி தமிழ் பாடசாலை வெளியீடான தேம்ஸ் சிறுவர் சஞ்சிகை வெளியீட்டு விழா யூனில் நடைபெற்றது. அதில் தேம்ஸ் இரண்டாவது இதழ் கோடைகால இதழாக வெளியிடப்பட்டது. இவ்விதழ் சற்று வித்தியாசமான முறையில் வடிவமைக்கப்பட்டு உள்ளது. தேம்ஸில் 7 வயது முதல் 12 வயது வரையானவர்கள் பங்கெடுத்து உள்ளனர். அதிக அளவு படங்கள் இம்முறை சேர்க்கப்பட்டு உள்ளது நன்று. சிறார்களின் எழுத்தாற்றலையும் வாசிப்பையும் ஊக்குவிக்கும் வகையில் தேம்ஸ் உள்ளமை பாராட்டுக்குரியது.

எமது தாயகம் பற்றிய சிறு சிறு குறிப்புகளையும், படங்களின் மூலம் தாயகத்தை அறிமுகம் செய்வதும் இன்னும் பொருத்தமானதாக இருக்கும். மேலும் இங்கு வாழும் சிறார்கள் சம்பந்தமான தேசிய மற்றும் தமிழ் செய்திகளை வழங்குவது அவர்களுக்கு இன்னமும் பயனுள்ளதாக இருக்கும். உதாரணமாக பள்ளியில் சிறுவர்களுக்கு வழங்கப்படும் உணவில் பழங்கள் சேர்க்க வேண்டும் என்று அரசு அறிவுறுத்தி உள்ளது. அத்துடன் அவர்களைப் பாதிக்கும் விடயங்கள் பற்றி வேறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தலாம். உதாரணமாக பரீட்சைகள் மாணவர்களுக்கு சுமை என்றும் அவற்றைக் குறைக்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சு கருதுகிறது. படம் : தேம்ஸ் வெளியீட்டு விழா

பூஞ்சிட்டு சிறுவர் சஞ்சிகை தெற்கு இலண்டன் தமிழர் நலன்புரிச் சங்க வெளியீடாக வெளிவந்துள்ளது. இதுவரை இரு இதழ்கள் வெளிவந்துள்ளன. அவர்களை சிறுவர் தேசம் வாழ்த்துகிறது.




## பரிசுகளை வெல்லுங்கள்

சிறுவர் தேசத்தில் நீங்களும் பங்கெடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் ஆக்கங்கள் சிறுவர் தேசத்தில் வெளி வந்தால் உங்களுக்கு பரிசுகள் வீடு தேடி வரும். உங்கள் ஆக்கங்களுடன் உங்கள் பெயர், முகவரி என்பவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பவும்.

## இவ்விதழில் பரிசு பெற்றவர்கள்

**தேம்ஸ் குழு**

இவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

பரிசுகள் ஓகஸ்ட் முடிவில் அனுப்பி வைக்கப்படும்.

# புலம் பெயர்ந்த தமிழ் ஆசிரியன் கவிஞன் விண்ணுக்கு புலம்பெயர்கிறான்

என் செல்வராஜா
நூலகவியலாளர்

கவிஞர்
செல்லையா நாகேந்திரன்
1946 யூன் 4 – 2004 யூன் 5



கவிஞர் செல்லையா நாகேந்திரன் 58வது வயது பூர்த்தியுற்று ஒரு நாளே கழிந்த நிலையில், மாரடைப் பால் உயிர்நீத்தார். யாழ் நாவற்குழியைப் பிறப்பிடமாக கொண்டவரும், இலண்டனில் வாழ்ந்து வந்தவருமான இவர் ஒரு சிறந்த தமிழ் ஆசிரியர். கவிஞர். சிலகாலத்திற்கு முன்னர் மாமதுரைக் கவிஞர் பேரவை இவருக்கு 'கவியருவி' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருந்தது.

புகலிடத் தமிழ்ச்சிறார்களின் தமிழ்வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்ட அமரர் நாகேந்திரன், வட லண்டன் தமிழ்ப் பாடசாலை, வோல்தம் பொரஸ்ட் தமிழ்ப் பாடசாலை, நால்வர் தமிழ்ப் பாடசாலை ஆகியவற்றில் நீண்டகாலம் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

சமூக இலக்கியப் பணிகளில் இவரது அளவு கடந்த ஈடுபாடு இவரைத் தன்னலம் கருதாத நேர்மையான சேவையாளனாக இனம்காட்டி வந்துள்ளது.

உலக சமாதான மன்றத்தின் ஆரம்பகால உறுப்பின ராகவும் இவர் பணியாற்றி வந்துள்ளார். அவ்வமைப்பின் தலைவர் Charles Omoroudion வழங்கிய இரங்கலுரை யில், அமரர் நாகேந்திரன் அவர்கள் உலக சமாதானத் தின் வாயிலாகவே மானிட கௌரவம், சுதந்திரம், விடுதலை, இனம், மதம், மொழி கடந்த சமத்துவம் ஆகியவற்றை அடையமுடியும் என்பதில் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தவர் என்றும், அந்த நம்பிக்கையுடன் அவர் உலக சமாதான மன்றத்தில் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.


இவர் 2000 ஆண்டு முதல் ஐந்து கவிதை நூல்களை வெளியிட்டு வைத்து இருந்தார். இன்னும் பல கவிதைகள் ஊடகங்களில் வெளியான நிலையிலும் பிரசுரமாகாத நிலையிலும் இவரது இல்லத்தில் குவிந்து கிடக்கின்றன.

எமது முன்னுள்ள கடமை அவரது பொறுப்பிலிருந்த பிரசுரமாகாத கவிதைகளைச் சேர்த்துத் தொகுத்து நல்லதொரு தொகுதியாக்கி, எதிர்கால சந்ததியினருக்கு வழங்க வேண்டும். அவரால் நன்மை பெற்ற பல நண்பர்களும், அவரது பணியை பெற்றுவளர்ந்த சமூகநல அமைப்புக்களும் இதற்கு முன்வருவதே அமரர் நாகேந்திரனுக்குச் செய்யும் கைம்மாறாக அமையும். ❑


Mathura Cakes

Cakes for all your occassions

◆ Birthdays
◆ Weddings
◆ Anniversaries
◆ or any other Event



பிறந்தநாள் அல்லது திருமண வைபவம் எதுவானாலும்
விரும்பிய வடிவத்தில் மனம் நிரம்பிடும் வர்ணத்தில்
செய்து கொள்ள நாடுங்கள்

Made by Experienced & Oualified Specialists
Call us ON :
020 8397 4073

# Gliimpses of the Elam Tamil Heritage

**By Charles Somasundrum**



**Gliimpses of the Elam Tamil Heritage** என்ற சார்ள்ஸ் சோமசுந்தரத்தின் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட சிறுவர் நூல் வெளிவந்து உள்ளது. இது தேசம் சஞ்சிகையின் மற்றுமொரு வெளியீடாகும். யூலை 27ல் இதன் அறிமுக விழா ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. ஆலயத்தின் அனுசரணையுடன் வோல்தம்ஸ்ரோ மூத்தோர் நலன்புரி அமைப்பு விழாவை ஏற்பாடு செய்திருந்தது. நலன்புரி அமைப்பின் தலைவர் யாழ் வேலனை முன்னாள் அரசாங்க அதிபர் என் தனபாலசிங்கம் விழாவுக்குத் தலைமை தாங்கினார்.



ஆலயத்தின் சார்பில் பி ரவீந்திரமோகன் அனைவரையும் வரவேற்றார். தலைமையுரையாற்றிய தனபாலசிங்கம் பெரும்பாலும் வரலாறு எழுதப்படும் போது கவனிக்காமல் விடப்படும் தீவுப் பகுதிகள் பற்றியும் நூலாசிரியர் சுட்டிக் காட்டியிருந்ததைப் பாராட்டினார். சிறார்களுக்கு இந்நூலின் அவசியம் பற்றியும் விளக்கினார். அடுத்து நூலாசிரியர் தமிழில் பேசவியலாமைக்கு தன் மனவருத்தத்தை வெளிப்படுத்தினார். (இவ்வுரை அடுத்த இதழில் வெளி வரும்.) அதன் பின் நூல் வெளியீடு இடம்பெற்றது.

நூலை ஆய்வு செய்த வரலாற்றுத்துறை விரிவுரையாளரும் சொற்பொழிவாளருமான தமிழருவி சிவக்குமார் சுருக்கமாகவும் அழகாகவும் நூல் வெளிவந்திருப்பதைப் பாராட்டினார். தமிழ் பேசத் தெரியாது விட்டாலும் தமிழை நேசிக்கும் உண்மையான தமிழன் சார்ள்ஸ் சோமசுந்தரம் என நூலாசிரியரை அவர் பாராட்டினார். தமிழருவி பல சுவையான தகவல்களையும் அங்கு நினைவுகூர்ந்தார். நூலில் நிலாவரைக் கிணறு போன்ற சில விடயங்கள் தவறவிடப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இறுதியாக உரையாற்றிய நியூகாம் கவுன்சிலர் போல் சத்தியநேசன் தேசம் சஞ்சிகையின் பல்வேறு வேலைத் திட்டங்களையும் குறிப்பிடடார். மூத்தோர் அமைப்பாளர்களுக்கு தன் நன்றியைத் தெரிவித்த அவர் இந்த மூத்தோரே எமது பண்பாட்டுத் தூண்கள் என்று கூறினார். விழா முடிவில் நூலாசிரியர், கவுன்சிலர், தமிழருவி ஆகியோர் காளாஞ்சி கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.



புலம்பெயர்ந்த தமிழ் சிறார்களுக்கு ஈழத் தமிழ் மக்களின் வரலாற்று பண்பாட்டு அம்சங்களை அறிமுகப் படுத்தும் நோக்குடன் இச்சிறுவர் நூல் வெளியிடப்பட்டு உள்ளது. இந்நூலாசிரியர் ஒர் வரலாற்றியலாளர் அல்ல என்பதை நூலின் முன்னுரையில் குறிப்பிட்டு உள்ளார். ஆனால் சிறார்களுக்கு எமது வரலாற்றை அறிமுகப்படுத்த இதனை ஒரு முதல் நூலாகக் கொள்ளமுடியும்.

வடலி மாதப் பத்திரிகையில் பிரசுரமான கட்டுரைகளுடன் மேலும் சில கட்டுரைகள் இணைக்கப்பட்டு நூல் வடிவில் ஆக்கப்பட்டது. இதன் வெளியீட்டுப் பொறுப்பை தேசம் சஞ்சிகை எடுத்திருந்தது. நூலின் முதற் பிரதியை தேசம் சஞ்சிகை சார்பில் அதன் வாசகர் அனுசிறிகுமார் நூலாசிரியரிடம் கையளித்தார்.



படம்

இ.மேல்: தேசம் வாசகர் ராஜன் நூலை கையளிக்கிறார்.
இ.கீழ் : தலைவர் தனபாலசிங்கம் நூலை பெறுகிறார்.
வ.மேல்: மூத்தோர் சங்க செயலாளர் நூலை பெறுகிறார்.
வ.கீழ் : தமிழருவி சிவக்குமார் ஆய்வுரை நிகழ்த்துகிறார்.

# வோல்தம்ஸ்ரோ தமிழ் பாடசாலை விளையாட்டுப் போட்டி :



வோல்தம்ஸ்ரோ தமிழ்ப் பாடசாலை, மானிப்பாய் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து நடாத்தும் இளவயதினருக்கான விளையாட்டுப் போட்டி பூல் அன் ட்ரக் மைதானத்தில் ஓகஸ்ட் முதலாம் திகதி இடம்பெற்றது. இதில் சேகரிக்கப்பட்ட பணம் இரு பாடசாலைகளினதும் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும் என ஏற்பாட்டாளர்கள் பி ரவீந்திரமோகன், குகச்சந்திரன் தெரிவிக்கின்றனர்.

வோல்தம்ஸ்றோ தமிழ் பாடசாலையின் தற்போதைய அதிபரான குகச்சந்திரன் (படம்) இவ்விழாவை முன்னின்று நடத்தினார். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முக்கிய உறுப்பினரான இவர் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் விளையாட்டு நிகழ்வுகளை முன்னின்று நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகளில் வோல்தம்ஸ்ரோ தமிழ்ப் பள்ளி மாணவர்கள் முக்கிய பங்கெடுத்தனர்.

விளையாட்டுப் போட்டிப் பிரசுரத்தில் ஆண், பெண் என சீன இனத்தைச் சேர்ந்த இரு சிறார்கள் ஓட்டப் பந்தயத்துக்கு தயாராய் நிற்கும் படம் போடப்பட்டு உள்ளது. தமிழ் விழாக்களுக்கான பிரசுரங்களை வெளியிடும் போது அதில் வேறு இனத்தவர்களின் படங்களை போடாமல் எமது பிள்ளைகளின் படங்களைப் போட வேண்டும். நாமே நம்மை ஒதுக்குவது ஏற்புடையதல்ல. வியாபார நோக்கத்தில் செய்யப்படும் விளம்பரங்கள் எப்படியும் அமையலாம் ஆனால் சமூக மேன்பாட்டு விடயங்களில் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏற்பாட்டாளர்கள் எதிர்காலத்தில் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

குறுந்தூர ஓட்டங்கள், உணவு உண்ணல் போட்டிகள், சாக்கு ஓட்டப் போட்டிகள், சைக்கிள் ஓட்டப் போட்டிகள் என பல்வேறு போட்டிகளும் ஆண், பெண்களுக்கான மகிழ்வூட்டும் போட்டிகளும் இடம் பெற்றது. பெரும்பாலான போட்டிகள் 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்காக ஒழுங்குபடுத்தப்பட்டு இருந்தது. விழா பயனுள்ளதாகவும் மகிழ்வாகவும் அமைந்தது.❑

Gliimpses of the Elam Tamil Heritage நூலை பெற்றுக் கொள்ள தபாற் செலவு உட்பட £5க்கான காசோலையை 'Thesam' என்ற பெயரிற்கு வரைந்து தேசம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

புத்தம் புதிய கணணிகள் £199 முதல்
உங்கள் தேவைகளுக்கு ஏற்ப
வடிவமைத்துக் கொடுக்கப்படும்.

Tel : 020 8422 3422

155 Greenford Rd
Sudburry Hill
HA1 3QN

# POLICE APPEAL FOR ASSISTANCE

**Young Tamil men from your community are being intimidated, seriously assaulted, and in extreme cases, murdered. The Metropolitan Police Service wants your assistance to help stop the violence.**

Today's operation is part of tackling this crime. We are committed to making communities safer.

Without your help it is very difficult for us to know who the criminals targeting your community are.

If you have any information on people who may be involved in criminal gangs, violence, financial fraud or other crime please phone the confidential Tamil hotline on:

# 0800 587 2935

where you can leave a message in Tamil or English. Alternatively please speak to your local police.

**உங்களது சமூகத்தை சேர்ந்த தமிழ் இளைஞர்கள் மிரட்டப்பட்டும், கடுமையாக தாக்கப்பட்டும், சில வேளைகளில் கொலை செய்யப்பட்டும் இருக்கிறார்கள். இந்த வன்முறையை தடுத்து நிறுத்த மாநகர காவல் துறை உங்களது உதவியை நாடுகிறது.**

**இந்த குற்றச்செயல்களை தடுத்து நிறுத்துவது இன்றைய எமது நடவடிக்கையின் ஒரு அங்கமாகும். சமூகங்கள் பாதுகாப்புமிக்கதாக மாறவேண்டும் என்பதில் நாங்கள் சிரத்தையாக இருக்கிறோம்.**

**உங்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் உங்களது சமூகத்தை இலக்குவைக்கின்ற குற்றவாளிகள் யார் நாங்கள் கண்டறிவது மிக கடினம்.**

**குற்றக்கும்பல்களுடன் தொடர்புகொண்டவர்கள், வன்முறையில் ஈடுபடுபவர்கள், பணம் சம்பந்தப்பட்ட ஏமாற்று வேலைகள் மோசடிகளை செய்பவர்கள், வேறு குற்றங்களில் ஈடுபடுபவர்கள் ஆகியவர் எவர் பற்றியேனும் உங்களிடம் தகவல் இருந்தால், தயவுசெய்து நீங்கள் தமிழில் தகவல் வழங்கக்கூடிய சிறப்பு சேவைக்கு** 0800 587 2935 **என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்புகொள்ளவும். தமிழிலோ ஆங்கிலத்திலோ பேசி நீங்கள் செய்தியை பதியவிடலாம். மாறாக உங்கள் பகுதி பொலீசாரையும் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.**

METROPOLITAN POLICE

*Working for a safer London*

30.08.04/G16541/A54

1. உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை.அதை ஏற்காதவர்களே ஜி நடேசனைக் கொலை செய்ததாக பத்திரிகையாளர் மாகாலிங்கசிவம் தெரிவித்தார். அரசும் இயக்கங்களும் பத்திரிகைச் சுதந்திரத்தை அச்சுறுத்தி வந்ததாக ஐ.பி.சி வானொலி நடத்திய நடேசனின் நினைவுக் கூட்டத்தில் மாலி மேலும் தெரிவித்தார். மாற்று மருத்துவ நிபுணர் சத்தியமூர்த்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. படம் : ஐ.பி.சி பணிப்பாளர் சிவரஞ்சித், அறிவிப்பாளர் ராஜன்.



2. பத்திரிகையாளர் எஸ் எம் கோபாலரட்ணத்தின் பாராட்டு விழா யூன் 22ல் ஜேர்மன் டோர்ட்மன்டில் நடைபெற்றது.'அந்த ஒரு உயிர்தானா உயிர்?' உட்பட அவரின் மூன்று நூல்களின் அறிமுக நிகழ்வும் பத்திரிகைப் பணிபற்றிய ஆய்வரங்கும் இடம்பெற்றது. இந்நிகழ்வை யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது. படம் : யூன் 21, 02ல் தேசம் சஞ்சிகை ஏற்பாடு செய்த யாழ் நூலக எரிப்பு நிகழ்வில் கோபு.



3. கலாபாரத் நுண்கலைக் கல்வி நிலையத்தின் மாணவிகள் சோபிதா சோமசுந்தரம், கவிதா மகேந்திரன் ஆகியோர்களது பரதநாட்டிய அரங்கேற்றம் செப்ரம்பர் 24ல் பெக் தியட்டரில் நடைபெற உள்ளது. அதே கூடத்தைச் சேர்ந்த (படம்) தட்சாணி தவயோகராஜாவின் அரங்கேற்றம் ஒக்ரோபர் 2ல் லோகன் மண்டபத்தில் நடைபெற உள்ளது. இம்மூவரும் ஸ்ரீமதி ராஜினி சுரேஸ்குமாரின் மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது.



4. மக்கள் சேவையே அம்பாள் சேவையென தாயகத்துக்கு கை கொடுக்க முன்னிற்கும் ஈலிங் கனக துர்க்கை அம்மன் ஆலயம்; சிறுவர் இல்லங்களை பராமரிப்பது, கணனிப் பயிற்சி நிலையங்கள், தொழில்பயிற்சி வழங்குவது என்பவற்றை விரிவுபடுத்தி உள்ளதுடன் கிழக்கில் வீடமைப்புத் திட்டத்துக்கும் ஏற்பாடு செய்துள்ளது. யூலையில் தாயகம் சென்று வந்த ஆலயத் தலைவர் கருணலிங்கத்தின் அனுபவம்-ஆய்வு அடுத்த இதழில். படம்: சிறார் இல்லத்து சிறுமிகளுடன் ஆலயத் தலைவர் கருணலிங்கம்.

